பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 20 ஞாயிற்றுக்கிழமை (05.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 249

# அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதித் தீர்வு யோசனை இம்மாத மத்தியில்

## ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என்கிறார் விதாரண

கொழும்பு,ஓகஸ்ட் 5

**இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் கண்டறியும் பொருட்டு உருவாக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தீர்வு யோசனை, முழுமையாக்கப்பட்டு - இறுதிசெய்யப்பட்டு - இம்மாத நடுப்பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படும்.**

**அதற்கான பணிகள் மிகத் துரித கதியில் நடைபெற்றுவருவதாக அ.க.வி.குழுவின் தலைவரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**

தற்போது நடைமுறையில் உள்ள மாகாண சபை முறையை மேலும் பலமுள்ளதாக்கும் விதத்திலும், கூடுதல் அதிகாரங்களை வழங்கும் வகையிலும், இந்திய, ஜேர்மனிய, பிரேஞ்சு முறைகளில் ஒன்றை அடியொற்றியதாக தீர்வின் இறுதி வடிவம் அமைவதே சிறந்தது என்றும் தாம் கருதுவதாக அவர் மேலும் கூறினார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான திட்டம் ஒன்றை வகுப்பதற்காக சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அனைத்துக் கட்சிக் குழு ஒன்று ஜனாதிபதி தலைமையில் அமைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அனைத்துக் கட்சிகளின் தெரிவுக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக அமைச்சர், பேராசிரியர் திஸ்ஸ விதாரண நியமிக்கப்பட்டார்.

இந்தத் தெரிவுக் குழு ஒரு வருடத்திற்கு மேலாக 40 இற்கும் அதிகமான கூட்டங்களை நடத்தி சகல கட்சிகளின் யோசனைகளையும் பெற்றுள்ளது.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு உறுப்பினர்கள் சமர்ப்பித்த யோசனைகளை ஆராய்ந்து இறுதிக்கட்ட யோசனை ஆவணத்தை தயாரிப்பதற்கு எதிர்வரும் 15ஆம் திகதி காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்திருக்கிறார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை திருக்கடலூரில் வெள்ளைவானில் கடத்தல்

திருகோணமலை,ஓக. 5

திருகோணமலை மாவட்டத்தில் திருக்கடலூரில் நேற்றுமுன்தினம் இரவு குடும்பஸ்தர் ஒருவர் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

பாரதிபுரத்தைச் சேர்ந்த சைமன் சிங்கோ சுமதிபாலா என்பவரே கடத்தப்பட்டவராவார்.

திருக் கடலூரில் உள்ள உறவினர் ஒருவர் வீட்டுக்கு அவர் சென்றிருந்தவேளை கடத்தப்பட்டார் என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-1-151)

## பொருள்களின் விலையேற்றத்தைத் தடுப்பதற்கு தேவையான அளவில் எடுத்துவர நடவடிக்கை

### அமைச்சர் டக்ளஸ் தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் முடிவு

யாழ்ப்பாணம்,ஓக. 5

* குடாநாட்டில் பொருள்களின் விலையேற்றத்தைத் தவிர்க்கும் பொருட்டு, அவற்றை தேவையான அளவில் இங்கு எடுத்துவருவது.

* அரசி, சீனி, கோதுமை மா, பருப்பு, பால்மா, உப்பு, மரக்கறி எண்ணெய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களை கூட்டுறவுச் சங்கக் கடைகளில் பங்கீட்டு அடிப்படையில், கட்டுப்பாட்டு விலைகளில் போதுமான அளவு விநியோகிக்க நடவடிக்கை எடுப்பது.

* உணவுப் பொருள் விநியோகம் சீரான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பது.

மேற்கண்ட முக்கிய முடிவுகள், சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் எடுக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.கா. தலைவர்கள் செவ்வாய் ரணிலைச் சந்தித்துப் பேசுவர்

கொழும்பு,ஓக. 5

அமைச்சர் பதவிகளில் இருந்து விலகியுள்ள இ.தொ.காவின் தலைவர்கள் ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவை செவ்வாய்க்கிழமை சந்திக்க உள்ளனர்.

நாடாளுமன்றத்தில் சுயாதீனக் குழுவாக இயங்க விருப்பதாக அறிவித்துள்ள இ.தொ. காங்கிரஸ், தமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்வதற்காக ஐ.தே. கட்சியைச் சந்திக்க இருக்கின்றது.


ஐ.தே.கவுடன் நடந்தவுள்ள பேச்சுக்கள் வெற்றியளிக்கும் பட்சத்தில், எதிரணியில் ஒரு கட்சியாக செயற்படுவது தொடர்பாக முடிவு செய்யப்படக் கூடும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

அமைச்சர், பிரதி அமைச்சர்கள் பதவிகளை ராஜினாமாச் செய்த இ.தொ.காவின் உறுப்பினர்கள் தமக்கு வழங்கப்பட்ட வாகனங்களையும், பாதுகாவலர்களையும் நாளை ஒப்படைக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நாளைமறுதினம் நாடாளுமன்றம் கூடும் போது இ.தொ.கா.நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுத் தரப்பில் பின்வரிசையில் அமர்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "நாயகனைத்" தேடிவந்த நட்புப் பறவை



யாழ்ப்பாணம், ஓக. 5

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா?.

மனிதர்களுக்கு மட்டுமா அந்த உணர்வு. ஏனைய உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் அதனை அதிகமாகவே கொடுத்திருக்கிறான் இறைவன்.

மோப்பம் பிடித்துத் தனது சொந்த இடத்துக்குத் திசை மாறாது, வழி தப்பாது திரும்பி வருவதில் மனிதர்களைவிட மிருகங்களும் பறவைகளும் வெகு திறமைசாலிகள்.

குறிப்பாகப் பறவைகள் கால நிலை மாற்றத்துக்கு இசைவாக கடல் கடந்து நாட்டுக்கு நாடு இடம்மாறுவதில் கைதேர்ந் தவை. தமது சொந்த இடத்துக்கும் போய்ச் சேர்வதிலும் கெட்டித்தனம் மிக்கவை.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு 'அதிசயப் பறவை' ஒன்று - இந்தப் பகுதியில் இதுவரை காணப்படாத பறவை ஒன்று - மூளாயில் ஒரு குளத்தடியில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு மக்கள் ஆதரவு அதிகரிக்கிறது; அதனால் பலம் இழக்காது - ஜனாதிபதி



கொழும்பு,ஓக. 5

"அரசு ஒருபோதும் பலம் இழந்து விடாது" என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் அவர் இதனை உறுதிபடச் சொன்னார்.

அரசுக்குப் பொதுமக்களின் ஆதரவு அதிகரித்துள்ளது. முன்னரைவிட அரசுக்கு மக்களின் ஆதரவு நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

யுத்தத்துக்குப் பெருமளவு நிதி பயன்படுத்தப்பட்ட போதிலும், அதேவேளை அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கம் வீழ்ச்சி காண்பது உறுதி; ஜே.வி.பி. ஒருபோதும் காப்பாற்றாது - விஜித



கொழும்பு,ஓக. 5

அரசாங்கம் வீழ்வது என்பது உறுதி. மஹிந்த அரசாங்கத்தை காப்பாற்றுவதற்கு ஜே.வி.பி. ஒருபோதும் முன்வராது - என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து விவரிக்கையில் கூறியதாவது:-

மஹிந்த அரசாங்கத்திலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விலகியமையானது வீழ்ச்சிதான். மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் இந்த வீழ்ச்சி என்பது அரசாங்கமே தேடிக்கொண்டது. இந்த அரசாங்கத்தை ஒரு போதும் நாங்கள் காப்பாற்றமாட்டோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மீளக் குடியமரும் பகுதிகளுக்கு வெளியார் செல்வதற்குப் படையினர் தடை!

திருகோணமலை,ஓக. 5

திருகோணமலை மாவட்டத்தில் மீளக் குடியமர்வு இடம்பெறும் பிரதேசங்களுக்கு வெளியார் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. - பெரும் கட்டுப்பாடு - விதிக்கப்பட்டுள்ளது.

மீளக் குடியமரும் மக்கள் தங்கள் பணிகளை நிறைவேற்ற வெளியிடங்களுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படுகின்றது. எனினும் அவர்களது உறவினர்களோ வேறு ஆள்களோ அங்கு செல்ல அனுமதி மறுக்கப்படுகின்றது.

மீளக் குடியமர்வு நடைபெறும் பிரதேசத்துக்குள் செல்ல விரும்புபவர்கள் படையினிடம் 'பாஸ்' பெற்றால் மட்டுமே அங்கு செல்ல முடியும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், 'பாஸ்' எடுப்பதற்கு வாரக் கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை -

மட்டக்களப்பில் இருந்து 720 குடும்பங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

யா/கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த பொதுக் கூட்டம்

எதிர்வரும் 18-08-2007 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரும் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
யா/கம்பர்மலை வித்தியாலயம்,
கொம்மந்தறை, வல்வெட்டித்துறை.

(63364)

## 3/ஆம் நாள் நினைவஞ்சலி

### முருகன் பொன்னி (பெரியம்மா)

(மருதம்குளம் வீதி, மட்.தெற்கு, சாவகச்சேரி)

பிறப்பு: 06.12.1934 இறப்பு: 06.07.2007


வாடி வந்தோம் உனை நாடி வந்தோம்
அமுதூட்டி அரவணைத்தாய் - எம் குடும்பம்
வாழ வாழ்வளித்த வள்ளல் அம்மா நீ
எம்முகம் பார்க்க தேடி நாடி ஓடி வருவாய்
இனி, அம்மா உன்முகம் காண ஏங்கித் தவிக்கின்றோம்.
தெய்வத்துள் நீயிருந்து தேற்றிடுவாய் எம்மை நீ.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சங்கரன் தங்கராசா (மகன்)
நவபுரம், கைதடி.

(63356)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சின்னத்தம்பி நாகராசா



மலர்வு 25.10.1951 உதிர்வு 18.08.2006

திதி: அட்டமி 06.08.2007

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆறாதையா உன் பிரிவு
நிலையில்லாத இவ்வுலகில்
நிலைத்துவிட்ட உன் அன்பால்
நினைவிழக்க முடியாமல் நாம்
நீந்துகின்றோம் கண்ணீரில்.

உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். இவ்வாண்டு நினைவில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்துகொள்ளவும்.

நிரந்தர முகவரி:
முகமாலை, எழுதுமட்டுவாள்.
தற்காலிக முகவரி:
குடமியன், வரணி. (சி/53158)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தாரணி மகேந்திரன்



(மகளிர் அபிவிருத்தி நிலையம், பிரதேச செயலகம், தென்மராட்சி)

சங்கத்தானை, பெரியஅரசடி, ஆசிரியர் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தாரணி மகேந்திரன் 03.08.2007 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் மகேந்திரன் - கோகிலாமணி தம்பதியரின் மகளும், கலாநிதி, சங்கீதா, செந்தூரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தசாமி, மனோன்மணி, இராசரத்தினம், ஜானகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.08.2007) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லாரை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆசிரியர் வீதி, பெரியஅரசடி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (63370)

தகவல்:
குடும்பத்தினர்.

## 25ஆவது பிறந்ததின நினைவும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



### ஜோண் அன்ரனி ஜெனற் மரியசாந்தி

மண்ணில் 05.08.1982 விண்ணில் 08.07.2007

மரியா! உனை நினைக்கும்
ஒவ்வொரு கணமும் இதயம் கனக்கிறது
மீண்டும் ஒருமுறை எம் பாசமகளாய்,
அன்பு அக்காவாய், செல்லத் தங்கையாய்
பிறக்க மாட்டாயா என்று கதறுகின்றோம்
உன் பாசமொழியும், சிரிப்பும்
நாம் கொஞ்சி மகிழ்ந்த உன் அழகும்
இலட்சியங்கள் நிறைந்த உன் இளமையும்
எமைவிட்டு நீ மறைந்து போனாலும்
எம் நினைவுகளில் நீ அனுதினமும் பிறந்து கொண்டிருக்கின்றாய்
எம் நினைவுகளில் வாழும் உன்னை [illegible]

A3, F34 புளூமெண்டால் தொடர்மாடி,
கொழும்பு- 13. T.P: 0112 335274. (63199)

பாச உறவுகள்.

யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் - 2007

ஒத்திவைக்கப்பட்ட மேற்படி நிகழ்வு பாடசாலை திறந்த வெளி அரங்கில் நடைபெறும்.

காலம்: இன்று (05.08.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணி

அனைவரையும் தயவு செய்து கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர், பாடசாலை
அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

கந்தரோடை,
சுன்னாகம்.

## OBITUARY

**Dr. E.S. Thevasagayam,**
Principal Emeritus,
St. John's College Jaffna,
Passed away on 3rd August 2007
in Colombo.

Contact: Mrs. Daisy Thevasagayam
119/5A, Kynsey Road, Colombo - 8
Tel No: 0112686124

(சி-53161)

**Principal,**
St. John's College, Jaffna.


**Sky Computers (Pvt) Ltd.**
No. 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021-4590325 Fax: 021-2229109
Affiliated With Irish International University (U.K)

விடுமுறைகாலப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன

(தனிப்பட்ட அவதானிப்புடன் வழங்கப்படும்)

(Unlimited Practical Hours)

Diploma Courses
Microsoft Office 1 Month
Desktop Publishing 1 Month
Hardware Technoloy 1 Month

Internet & E-mail - 2 Weeks

Certificate Courses
Word
Excel
Access
Power Point
PageMaker 7.0
Photoshop Cs2 (10)
CorelDRAW Cs3 (13)

Batch I - 06.08.07
Batch II - 08.08.07

E-mail: skycomputers_2@yahoo.com
Todas You Learn Tomorrow You Lead



விமான பொதிகள் சேவை

உங்கள் பொதிகளை யாழ் - கொழும்பு அல்லது கொழும்பு - யாழ் தினசரி விமானம் மூலமாக உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

கிளியரன்ஸ் இல்லாத பொருட்களுக்கு MOD பெற்று உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும்

கொழும்பு - யாழ் - 1Kg 250/=
யாழ் - கொழும்பு - 1Kg 200/=

EURO GROUP OF COMPANIES
35, STATION RD, MOUNT LAVINIA.
TEL: 077 3846998, 0114 542190

INTERNATIONAL COURIER SERVICE
11, VIHARA LANE, COLOMBO 06.
TEL: 011 4961196, 077 3561891


## தவறிவிட்டது

ராஜசண்முகேந்திரசிங்கம் கதீபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (873470771V) மருதனார்மடத்திற்கும் மானிப்பாய் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
இ. ராஜசண்முகேந்திரசிங்கம்,
தபால் அலுவலகம், மானிப்பாய்ச் சந்தி, மானிப்பாய்.

(63382)

## மணமக்கள் தேவை

யாழ். இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் குடியுரிமையுள்ள, 1977 இல் பிறந்த, உத்தரம் 2ஆம் பாதம், 8 இல் செவ்வாய், கிரகபாவம் 55 உடைய Computer Engineer மணமகளுக்கு, டாக்டர், எஞ்சினியர், கணக்காளர் அல்லது ஆங்கில அறிவுள்ள வெளிநாடு / உள்நாடு மணமகனும், லண்டனில் குடியுரிமையுள்ள 1981 இல் பிறந்த, புனர்பூசம் 4ஆம் பாதம், 8 இல் செவ்வாய், கிரகபாவம் 40 உடைய லண்டன் பட்டதாரி மணமகளுக்கு எஞ்சினியர், கணக்காளர், B.Sc அல்லது ஆங்கில அறிவுள்ள, Computer அறிவுள்ள மணமகனும் தேவை. உள்நாடு/வெளிநாடு. [illegible]

[illegible]

[illegible]
தொ.பே. 0776[illegible]4434,
0774047531.

# மரண அறிவித்தல்கள்

### திருமதி வெலிச்சோர் ஆகத்தம்மா

(தங்கச்சியம்மா)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வெலிச்சோர் ஆகத்தம்மா 03.08.2007 வெள்ளிக்கிழமை வள்ளிபுனத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வெலிசோர் அவர்களின் அன்பு மனைவியும் நவம் (சுவிஸ்), அந்தோனிப்பிள்ளை (ஓய்வு பெற்ற தபால் அதிபர்), லில்லிமலர், தேவதாஸ் (லண்டன்), மரியதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயும் ராணி, எட்னா (வவா), அமரர் ரவி, வசந்தி, தங்கா ஆகியோரின் மாமியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம். (63351)

தகவல்:
வசந்தி (மருமகள்).

### வைரவப்பிள்ளை செல்லம்மா

(முத்ததம்பி)



இணுவில் கிழக்கு, சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவப்பிள்ளை செல்லம்மா (03.08.2007) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வைரவப்பிள்ளையின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, கமலாம்பிகை, குணசிங்கம், இரத்தினசிங்கம், புவனேஸ்வரி, செல்வரத்தினம், ஸ்ரீரஞ்சனிதேவி, புனிதவதி, பொன்னம்பலம் (சுவிஸ்), வசந்தமாலா, இந்திராதேவி (ஜேர்மனி), சந்திரா ஆகியோரின் பாசமிகு தாயும் அமரர்களான சங்கநாதப்பிள்ளை, நடராசா, பூபாலசிங்கம், சிவபாதம், பொன்னுத்துரை மற்றும் செல்வராணி, விக்கினேஸ்வரி, வள்ளியம்மை, கோமதி, சச்சிதானந்தமூர்த்தி, தங்கராசா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கிழக்கு,
இணுவில். (63360)

தகவல்:
குடும்பத்தினர்.

### நாகலிங்கம் ரூபசிங்கம் (மணி)



(வேலணை கிழக்கு, முன்னைநாள் C.T.B நடத்துநர்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் 224/4, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ரூபசிங்கம் நேற்று (04.08.2007) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சரோசினியின் அன்புக் கணவரும் நிரஞ்சன் (U.K), ராகுலன் (சப்ரகமுவ பல்கலை. மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தசாயினியின் (U.K) அன்பு மாமனும் அமரர் நாகலிங்கம் - பாரசக்தி தம்பதியின் அன்பு மகனும் தட்டாதெரு அமரர் தாமோதரம்பிள்ளை - இராசம்மா தம்பதியின் மருமகனும் அமரர் சிவமணி கந்தப்பு (ஆசிரியர்), பரமேஸ்வரி இராசையா (முன்னாள் மலாயன் கபே), நாகேஸ்வரி கந்தசாமி, துரைசிங்கம் (காசாளர், ஸ்ரீராம் களஞ்சியம்), இரத்தினசிங்கம், அமரர் சாரதா, அரசரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவபாக்கியம், சுப்பிரமணியம் (கனடா), இரத்தினசிங்கம் (ஈஸ்வர் கோப்பரேசன்), சொர்ணலிங்கம் (அவுஸ்திரேலியா), மகேஸ்வரன் (ஈஸ்வர் கோப்பரேசன்), ஜெகதாம்பாள் சிவஞானசிங்கம் (பிரான்ஸ்), கமலாம்பாள் செல்வரட்ணம் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

224/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம் (63363)

தகவல்:
மனைவி, மக்கள், மருமகள்.

### தருமலிங்கம் சண்முகராஜா (அலன்)



(அலன் பான்சி கவுஸ் உரிமையாளர்)

காரைநகர், கருங்காலியை பிறப்பிடமாகவும் இல.80, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தருமலிங்கம் சண்முகராஜா (அலன்) 03.08.2007 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தருமலிங்கம்- சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் மயில்வாகனம்-மகேஸ்வரி தம்பதியின் அன்பு மருமகனும் சுபாசினியின் (ஆசிரியை யாழ். நாவலர் ம.வி)அன்புக் கணவரும் துவாரசியின் பாசமிகு தந்தையும் பாலகிருஷ்ணன், தியாகேஸ்வரி, தியாகராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சதீஸ்குமாரின் (லண்டன்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.80, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (63354)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் பேச்சுகளை ஆரம்பிப்பதே அல்லலுறும் மக்களுக்கு பாதுகாப்பு

## வடக்கில் இராணுவப் பாய்ச்சல் இலகுவானதல்ல

சரியாக ஒரு வருடத்துக்கு முன் ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் மூதூர் மீது மேற்கொள்ளப்பட்ட சீண்டப்படாத தாக்குதல், தொடர்ச்சியான சம்பவங்களுக்கு வழிகோலி, இறுதியில் சிலவாரங்களுக்கு முன் குடும்பி மலையை மீட்பதில் முடிவடைந்தது. இறுதி முடிவினை இன்னும் எதிர்கொள்ளவில்லை என்பதால், முடிவடைந்தது என்ற சொல்லை இங்கு பிரயோகிப்பது உசிதமல்ல.

மேலும் இராணுவ நடவடிக்கை தொடரும் என்று நாம் இங்கு கூறவில்லை. பேச்சு மேசைக்குத் திரும்புவதைக் கொண்டு இப்படியானதொரு நிலையை விடுதலைப் புலிகள் தவிர்த்துக்கொள்ளலாம். நாம் எதிர்பார்க்கும் முடிவு, பலகாலம் மக்கள் அல்லலுற்று வந்த கிழக்கு மாகாணத்தில் துரித அபிவிருத்தியையும் ஜனநாயகத்தையும் ஏற்படுத்துவதாகும்.

இராணுவ நடவடிக்கையின் போது பொதுமக்களுக்கு ஆகக் குறைந்த சேதம் ஏற்படுவதை உறுதிப்படுத்தியமைக்காக சமாதானச் செயலகம் அதன் மெச்சுதலைத் தெரிவித்துக்கொள்கிறது. மீண்டும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் யுத்தத்தைத் தொடரவேண்டி ஏற்படின், இதேபோன்ற பொறுப்பு மற்றும் கவனத்துடன் ஆயுதப் படையினர் செயற்படுவர் என்பது எமது திட நம்பிக்கையாகும்.



ரஜீவ விஜேசிங்க
[செயலாளர் நாயகம், இலங்கை அரச சமாதானச் செயலகம்]

கிழக்கில் தேர்தல்கள் நடத்தப்பட்டால், அங்கு இரத்தக்களரி ஏற்படும் என்ற நிலைப்பாட்டைக் கைவிடும்படியும், இத்தருணத்திலாவது அரசியல் செயற்பாட்டில் சேர்ந்துகொள்ளுமாறும் நாம் விடுதலைப் புலிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண நிறுவனங்கள் ஆகியவற்றுக்குத் தம் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் வாய்ப்பு வெகு சீக்கிரம் இப்பிரதேச மக்களுக்கு கிடைக்கும் என்பதானது துரித மீள்குடிய மர்த்தல் நடவடிக்கைகளுக்குச் செலுத்த வேண்டிய பாராட்டாகும்.

இன்னும் பல காரியங்கள் செய்ய வேண்டியிருப்பினும், கடந்த சில மாதங்களில் அடையப் பெற்ற பெறுபேறுகள் இதுபோன்ற ஏனைய மோதல் நிலவும் வலயங்களைவிட மிக முன்னேற்றகரமாகவே உள்ளன. இச்சாதனைக்காக அரசை பாராட்டும் அதே வேளையில், முழுமையான மீள்குடியமர்த்தல் மேற்கொள்ளப்படுவதோடு, இப்பிரதேச மக்களுக்கு மேலும் சிறந்ததொரு வாழ்க்கைத் தரம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனவும் நாம் நம்புகிறோம்.

### சர்வதேச சமூகம் புனர்வாழ்வு திட்டங்களுக்கு உதவவேண்டும்

எனவே, புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு செயலாற்றலுடனும் தெளிவாகவும் பங்களிப்பை வழங்கி, குறிப்பாக சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் பேணல், கல்வி அத்துடன் வாழ்வாதாரம் ஆகியவை தொடர்பான உறுதியான நோக்கங்கள் தொடர்பாகச் செயற்படுமாறு நாம் சர்வதேச சமூகத்தைக் கேட்டுக்கொள்ளுகிறோம். பிறரைச் சார்ந்து வாழாமல் இருப்பதற்காக மக்களுக்கு அதிகாரத்தை வழங்கும் திட்டங்களை அபிவிருத்தி செய்யுமாறு தனியார் துறையைக் குறிப்பாகப் பிரதேசத்தின் வர்த்தக மன்றங்களையும் நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தற்போது கிழக்கிலுள்ள மக்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை நாம் எதிர்பார்க்கின்ற போதிலும், இம்மோதலின்போது உயிரிழந்தோரை நாம் சோகத்துடன் நினைவுகூர வேண்டும். அண்மைக்கால நடவடிக்கைகளின்போது மிக சிறப்பாகச் செயலாற்றினாலும் அன்று பாரிய அழுத்தங்களுக்கு மத்தியில் செயற்பட்ட படைவீரர்களும் இவர்களுள் அடங்குவர்.

எமது படைத்தரப்பினர் அல்லது 80ஆம் தசாப்தத்தின் கடைசிப் பகுதியில் எமது சார்பில் பயங்கரவாதத்துக்கு எதிராக கடும் போராட்டம் நடத்திய இந்திய அமைதி காக்கும் படையினர் ஆகிய எத்தரப்பினரும் இப்பிரதேசத்தில் முன்னர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது துரதிஷ்டவசமாக நேர்ந்த அத்து மீறிய நடவடிக்கைகள் பற்றிய குற்றச்சாட்டுகள் இப்போது இல்லாதிருப்பது இதற்கொரு எடுத்துக்காட்டாகும்.

விடுதலைப்புலிகளிடையே, கொல்லப்பட்ட எமது சக பிரஜைகளையும் குறிப்பாக யுத்தம் புரிவதற்காக வலுக்கட்டாயமாக அணி திரட்டப்பட்ட சிறுவர்களை நாம் நினைவுகூரவேண்டும். ஏனைய நாடுகளுடன் ஒப்பீட்டளவில் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும், பலியான பொதுமக்களையும் நாம் மறக்க முடியாது.

ஒரு வருடத்துக்கு முன் விடுதலைப்புலிகள் சடுதியாக மேற்கொண்ட தாக்குதலின்போது, உயிர் துறந்த மூதூர் மக்களை நாம் மறக்கமுடியாது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட தீவிர நடவடிக்கைகளின் போது அவர்களைப் பற்றிய நினைவு மறைந்த போதிலும், எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி இப்படிப் பாரிய அளவில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறும் விதத்தில் பாரியதொரு தாக்குதல் இந்நகர் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொண்டதை நாம் மறக்கமுடியாது.

### மூதூரில் தொண்டு நிறுவன ஊழியர்களின் கொலை

அதிக எண்ணிக்கையில் மூதூருக்கு அனுப்பப்பட்ட பிரெஞ்சு தொண்டு நிறுவனத்தின் தொண்டர்கள் 17 பேர் கொலை செய்யப்பட்டதும் எமது மனதை விட்ட கலவில்லை. ஏனைய தொண்டர்கள் அவ்விடத்தை விட்டகன்ற நிலையிலும், தாம் வெளியேற விரும்பியபோதிலும் - கடுமையான பல கஷ்டங்களுக்கு மத்தியில் தொடர்ந்து அங்கு இருக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதையும் நாம் ஞாபகப்படுத்துகிறோம்.

அவர்களை அங்கு வைத்திருப்பதற்கான முடிவு நல்ல நோக்கத்துடன் எடுக்கப்பட்ட போதிலும், அன்று நிலவிய தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டைப் பற்றி முழுமையானதொரு விசாரணையை மேற்கொள்ளுமாறும் இச்சோக சம்பவம் காரணமாக வெளிப்படையாகச் செயற்படவேண்டிய அவசியம் கருதி அது பற்றிய அறிக்கையை பகிரங்கப்படுத்தும்படியும் நாம் பிரெஞ்சு தூதுவர்களையும் பிரான்சுக்கான இலங்கைத் தூதுவரையும் வலியுறுத்திக் கேட்டுள்ளோம்.

விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு நாம் அரசைக் கேட்டுக்கொள்வதோடு இவ்விடயம் தொடர்பாக விசாரணை ஆணைக்குழு துரித நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறோம். இணக்கம் காணப்பட்ட சாட்சிகள் பாதுகாப்புச் சட்டம் தாமதமின்றி செயற்படுத்தப்படும் என நாம் குறிப்பாக நம்புகிறோம்.

இச்சம்பவம் பற்றி திறந்ததொரு விசாரணையை நடத்துவதற்கு உதவிய அவுஸ்திரேலிய அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, சாட்சியத்துக்கு அர்த்தம் கற்பிப்பதில் ஏற்பட்டுள்ள பிணக்கைத் தீர்த்து

## விடுதலைப் புலிகள் பேச்சின் மீது நம்பிக்கை வைக்க சர்வதேச சமூகம் தளர்வின்றி முயற்சி எடுக்கவேண்டும்

வைப்பதற்காக அரசு கேட்டுக்கொண்ட பேச்சுகளை அது துரிதப்படுத்தும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

சாட்சியத்தில் தலையீடு செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச சட்டவியலாளர்கள் ஆணைக்குழு, ஒரு தலைப்பட்சம் குற்றம் சாட்டுவதற்கு வழிவகுத்துள்ளதால் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பது அவசரமானதாகவுள்ளது.

அப்படி சாட்சியங்களில் தலையீடு செய்யப்பட்டிருப்பின் அது பற்றி உடனடியாக அரசின் கவனத்துக் கொண்டு வந்து முழுமையாக அது புலனாய்வு செய்யப்படவேண்டும் என்பதோடு, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு வழிவகுத்து இச்சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ள சகல தரப்பினரின் உணர்வுகளில் நச்சுத்தன்மையை ஏற்படுத்துவதாக அமைந்து விடும்.

### கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் கூறியது

இது தொடர்பாக, இலங்கை படைத்தரப்பினரே குற்றமிழைத்துள்ளனர் என்று அவருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை மீறித் தன் நம்பிக்கையை பகிரங்கமாக வெளியிட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ஜெனரல் ஹென்ரிக்சன் விடயத்தில் உறுதியான நடவடிக்கை எடுக்குமாறு நாம் நோர்வே அரசை வலியுறுத்துகிறோம்.

பிரான்ஷிலுள்ள இலங்கையின் தூதுவரின் அறிவுறுத்தலை கருத்திற் கொள்ளாது இச்சம்பவத்தை நினைவுகூரும் நிகழ்வொன்றுக்கு பிரெஞ்சு தொண்டர் அமைப்பு அவருக்கு அழைப்பு விடுத்தது துரதிஷ்டவசமானது என்பதோடு, அதுபோன்ற பொறுப்பற்ற விடயங்கள் எதிர்காலத்தில் நிகழாது என நாம் நம்புகிறோம்.

தமது குற்றச்சாட்டை நிரூபிப்பதற்குத் தம்மிடம் மேலும் சான்றுகள் உள்ளதாகவும் அவற்றை சுயேச்சையான ஆணைக்குழுவொன்றுடன் அல்லாது தாம் பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை என்பதாகவும் இந்நிகழ்வின் போது ஜெனரல் ஹென்ரிக்சன் கூறியதாக அறிவிக்கப்படுகிறது.

அத்தகைய சான்றுகளைப் புலனாய்வு அதிகாரிகளுக்கு வழங்கத் தவறுவது தமது கடமையை அவர் பாரிய அளவில் புறக்கணிப்பதாகும். எவ்வாறாயிருப்பினும், சுயேச்சையான ஆணைக்குழுவொன்று இப்போது நியமிக்கப்பட்டுள்ளதால், இது பற்றி அவர் மேலும் சாக்குப் போக்குக் கூறமுடியாது. ஜெனரல் ஹென்ரிக்சன் காட்டிய தயக்கமும் தாமதங்களும் சகல தரப்பினரிடையே சந்தேகங்கள் எழுவதற்கும் காரணமாயிருப்பதால், இவ்விசாரணையை துரிதப்படுத்துமாறு நாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

### முஸ்லிம்களின் மரணத்துக்காகவும் வருந்துகின்றோம்

தொண்டர்களின் கொலைகளின் மாபெரும் குற்றத்தை நாம் இனங்காணும் அதேவேளையில், வேண்டுமென்றே விடுதலைப்புலிகளினால் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம்களின் மரணத்துக்காகவும் வருந்துகிறோம்.

தெளிவாகவே தொண்டர்களின் கொலைகளை உலகம் நினைவு கூருகிறது என்ற போதிலும், கடும் துன்பங்களுக்குட்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தின் உறுப்பினர்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட பல்லினத் தொகுப்பைக் கொண்ட இப்பிரதேசத்தில் பிரிவினைவாதம் ஓரங்கட்டப்படும் என நாம் எதிர்பாக்கிறோம். இறுதியாக, பேச்சுகளுக்குத் திரும்ப மாட்டோம் என்ற நிலைப்பாட்டில் விடுதலைப்புலிகள் அமைப்பு தொடர்ந்தும் பிடிவாதமாக இருக்காது என நாம் நம்புகிறோம்.

### வடக்கின் மீதான இராணுவ நடவடிக்கை


வடக்கில் இராணுவச் செயற்பாட்டை மேற்கொள்ளுவது படைப்பிரிவினருக்கு இலகுவான ஒன்றாக இருக்காது என்பது முற்றிலும் சரியே என்பதோடு, அப்படி நடப்பின் அதிக எண்ணிக்கையிலான படைவீரர்கள் மற்றும் பொதுமக்களுக்குச் சேதம் ஏற்படும் எனவும் குறிப்பிட வேண்டும்.

(8ஆம் பக்கம் பாக்க...)

# பயிற்சியாளர் நியமனத்தில் அவசரமின்றி அடக்கி வாசிக்கும் இந்தியக் கிரிக்கெட் சபை!



கார்த்திக்



நிரஞ்ஜன் ஷா

இந்திய அணியின் பயிற்சியாளர் தேர்வில் அவசரம் காட்டப் போவதில்லை என இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. உலக கிண்ணத் தோல்விக்கு பின் ஆஸ்திரேலியாவின் சப்பல் தனது இந்திய பயிற்சியாளர் பதவியை ராஜினாமா செய்தார். இதைத் தொடர்ந்து பயிற்சியாளராக தென்னாபிரிக்காவின் கிரஹாம் போர்ட் தேர்வு செய்யப்பட்டார். முதலில் பதவியேற்கவிருப்பம் தெரிவித்த இவர் பின்னர் அதை உதறிதள்ளினார். இதையடுத்து தர்மசங்கடத்துக்கு ஆளான இந்திய கிரிக்கெட் போர்டு புதிய பயிற்சியாளர் தேர்வை தள்ளிவைத்தது. இங்கிலாந்து சுற்றுப் பயணத்துக்கு, இந்திய அணி பந்துவீச்சு பயிற்சியாளர் வெங்கடேச பிரசாத், களத்தடுப்புப் பயிற்சியாளர் ரொபின்சிங் மற்றும் முகாமையாளர் சந்து போர் டேவுடன் களமிறங்கியது. இந்நிலையில் இந்திய அணியின் புதிய பயிற்சியாளர் தேர்வு குறித்து வரும் 10ஆம் திகதி நடக்கும் இந்திய கிரிக்கெட் சபையின் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கிரிக்கெட் சபையின், செயலர் நிரஞ்சன் ஷா கூறியதாவது:-

நிர்வாகிகள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள். இதில் பயிற்சியாளர் தேர்வு குறித்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். றொபின் சிங் மற்றும் பிரசாத் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலைகளை சிறப்பாக செய்து வருகின்றனர். கவாஸ்கர், வெங்கட் ராகவன், ரவி சாஸ்திரி என மூன்று முன்னாள் தலைவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு நல்ல பயிற்சியாளரை தேர்வு செய்யும் என நம்புகிறேன். புதிய பயிற்சியாளரை தேர்வு செய்வதில் அவசரம் காட்டப் போவதில்லை. சிறந்த பயிற்சியாளரை தேர்ந்தெடுப்போம். இப்பதவிக்காக விளம்பரம் செய்யவேண்டும் எனக் கூறவில்லை. ஆனால், இதுகுறித்து சபை, நிர்வாக கூட்டத்தில் கருத்துக் கேட்கப்பட்டது-என்றார்.

### தேர்வுக்குழுத் தலைவராக புதிய தகுதி

இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழு தலைவராக பொறுப்பேற்பதற்கு 5 டெஸ்ட் அல்லது 15 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றிருக்கவேண்டும் என்று தகுதி நிர்ணயம் செய்யப்படவுள்ளது.

இந்திய அணியின் தேர்வுக்குழு தலைவராக வெங்சர்க்கார் உள்ளார். இவர் வரும் 2008 வரை இப்பதவியில் நீடிப்பார். வருங்காலத்தில் தேர்வுக்குழு தலைவர் பதவி வகிப்பவர்கள் குறைந்தது 5 டெஸ்ட் அல்லது 15 ஒரு நாள் அல்லது 50 முதல்தர போட்டிகளில் பங்கேற்றிருக்க வேண்டும் என்ற விதி கொண்டு வரப்படும் என தெரிகிறது

இதுபற்றி கிரிக்கெட் சபைச் செயலர் கூறுகையில்,

இத்தகுதியை க்கட்டாயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். செயற்குழு கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. வருங்காலத்தில் இத்தகுதி உடையவர்கள் மட்டுமே தேர்வுக்குழு தலைவர் பதவியை ஏற்கமுடியும். மேலும் தேர்வுக்குழு உறுப்பினர் மாநில கிரிக்கெட் சங்கத்தின் நிர்வாகக்குழு பொறுப்புகளை வகிக்க முடியாது. இதன் மூலம் அணி தேர்வில் பாரபட்சத்தை ஒழிக்க முடியும்;- என்றார்.

இதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற சபையின் செயற்குழு கூட்டம் எதிர்வரும் 21 ஆம் தேதி மும்பையில் கூடுகிறது.

### கபில்தேவ் தலை தப்புமா?

தேசிய கிரிக்கெட் அக்கடமியின் தலைவர் பதவியில் கபில்தேவ் நீடிப்பது குறித்து இந்திய

**சர்வதேச அரங்குகளில்**

கிரிக்கெட் போர்டு விரைவில் முடிவு எடுக்க உள்ளது.

கிரிக்கெட் சபைக்கு சவாலாக, ஜீ.'ரி.வி.' யின் சார்பில் இந்திய கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் செயற்குழு தலைவராக கபில்தேவ் உள்ளார். முன்னாள் வீரர்களான கிரண் மோரே, சந்தீப் பாட்டீல், மதன்லால் ஆகியோரும், மேற்கிந்தியத் தீவுகள் பிரையன்லாராவும் இந்தியன் கிரிக்கெட் லீக்கில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன், மெக்ராத் ஆகியோரும் இதில் பங்கேற்பதாக வெளிவந்த தகவல்களை அவர்கள் மறுத்துள்ளனர். பரிசுத்தொகை அதிகமாக உள்ள போதும் சிறந்த வீரர்கள் இதில் பங்கேற்க ஆர்வம் காட்டவில்லை.

இதற்கு முக்கிய காரணம் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் அங்கீகாரம் இல்லாததே. சமீபத்தில் ஓய்வுபெற்ற வீரர்கள், அணியில் நிரந்தர இடம் கிடைக்காதோர் மட்டுமே கிரிக்கெட் லீக், பக்கம் சேருவார்கள் என தெரிகிறது. இந்திய வீரர்களை கிரிக்கெட் சபை, எச்சரித்துள்ளதால் ஒருவர் கூட எட்டிப்பார்க்க வில்லை.



கபில்தேவ்

தற்போது ஐ.சி.எல்., செயற்குழு தலைவராக உள்ள கபிலை, தேசிய கிரிக்கெட் அக்கடமியில் இருந்து நீக்கவேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

இது குறித்து முக்கிய முடிவு எதிர்வரும் 21 ஆம் திகதி மும்பையில் நடக்க உள்ள இந்திய கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளது. கிரிக்கெட்சபைத் தலைவர் சரத்பவார் கூறுகையில், ஐ.சி.எல்., மூலம் எந்த அச்சுறுத்தலும் இல்லை. ஓய்வுபெற்ற வீரர்கள் விளையாடுவதை பார்க்க ரசிகர்கள் விரும்பமாட்டார்கள்.

இளம் வீரர்களும் இதில் ஆர்வமாக இல்லை. அங்கீகரிக்கப்பட்ட தொடர்களில் பங்கேற்கும் வீரர்களுக்கே தேசிய அணியில் இடம் அளிக்கப்படும்- என்றார்.

### ஐ.சி.சி. தரவரிசை கார்த்திக் முன்னேற்றம்

ஐ.சி.சியின் புதிய தரவரிசையில் இந்திய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தினேஷ் கார்த்திக் 58ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஐ.சி.சி. டெஸ்ட் போட்டிகளுக்கான புதிய தரவரிசைப் பட்டியலை அண்மையில் டுபாயில் வெளியிட்டது. இதில் டிரண்ட்பிரிட்ஜ் டெஸ்டில் சிறப்பாக பந்துவீசி 9 விக்கெட்டுகள் வீழ்த்திய ஜாகிர்கான், 671 புள்ளிகளுடன் அதிரடியாக 7 இடங்கள் முன்னேறி 12ஆவது இடத்தை பிடித்துள்ளார். இதுதான் தரவரிசையில் இவர் பெறும் அதிகபட்ச புள்ளியாகும். மூன்றாவது டெஸ்டிலும் இவர் சிறப்பாக செயல்பட்டால், முதன் முறையாக 'ரொப்-10' பந்து வீச்சாளர்கள் பட்டியலில் இடம்பெறலாம். அனில்கும்ளே ஓரிடம் பின்தங்கி 7ஆம் நிலைக்கு வந்துள்ளார். மற்ற இந்திய பந்து வீச்சாளர்களான பதான் 19ஆவது, ஹர்பஜன் 27ஆவது, ஸ்ரீசாந்த் 30ஆவது, ஆர்.பி.சிங் 36ஆவது, முனாப் 48ஆவது இடத்தில் உள்ளனர்.

துடுப்பாட்ட வீரர்கள் பட்டியலில் டிரண்ட்பிரிட்ஜ் டெஸ்டின் முதல் இன்ங்சில் அரைசதம் கடந்த கங்குலி 8 இடங்கள் முன்னேற்றம் கண்டு, 573 புள்ளிகளுடன் 30ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

இந்தியாவுக்கு சிறப்பான தொடக்கம் தந்த தினேஷ் கார்த்திக்(436 புள்ளிகள்) 58ஆவது நிலைக்கும், ஜாபர் (527 புள்ளி) 38 ஆவது நிலைக்கும் முன்னேறியுள்ளனர். அணித் தலைவர் டிராவிட் (764 புள்ளிகள்) மற்றும் சச்சின் (669 புள்ளிகள்) முறையே 9ஆவது மற்றும் 17 ஆவது இடத்தை தக்கவைத்து கொண்டுள்ளனர். மற்ற இந்திய துடுப்பாட்ட வீரர்களான லட்சுமண் 23ஆவது, சேவக் 25ஆவது, தோனி 52ஆவது, யுவராஜ் 63 ஆவது இடங்களில் உள்ளனர்.

### பங்களாதேஷ் பயிற்சியாளராக வில்லியம்ஸ்

பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளராக 'ருவென்ரி-20' உலக கிண்ணத் தொடர் வரை ஷான் வில்லியம்ஸ் நீடிப்பார் என அறி

**டிலான்**

விக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த டேவ் வாட்மோர் சமீபத்தில் தனது பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து தற்காலிக பயிற்சியாளராக ஆஸ்திரேலியாவின் ஷான் வில்லியம்ஸ் நியமிக்கப்பட்டார்.

எதிர்வரும் செப்ரெம்பரில் தென்னாபிரிக்காவில் நடக்க உள்ள 'ருவெண்டி-20' உலக கிண்ணம் வரை இவர் இப்பதவியில் நீடிப்பார். இது குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் போர்டு நிர்வாகி அகமது சசதுல் ஆலம் கூறுகையில், 'ருவென்ரி-20' உலகக்கிண்ணம் வரை பணியாற்றுமாறு வில்லியம்சை கேட்டுக் கொண்டுள்ளோம்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவு கூருகின்றோம்

தோற்றம்
04 - 05 - 1929



மறைவு
01 - 08 - 2007

**கலாநிதி அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை** B.A., FCA
(பட்டயக் கணக்காளர் )
**போஷகர் ஞானசம்பந்தர் கலைமன்றம்**

*மன்றத்தின் போஷகராக 10 வருடங்கள் பணி செய்து வழிகாட்டியாகவும் பல அன்பளிப்புகளை வழங்கியும் எங்களது உள்ளங்களில் ஆழப் பதிந்துள்ள அமரர் அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா அயராது ஆலயப்பணி செய்த புலோலி பசுபதீஸ்வரரின் இறையடி சேரப் பிரார்த்திக்கின்றோம்.*

நிர்வாகிகள்,
ஞானசம்பந்தர் கலைமன்றம்,
புலோலி கிழக்கு.

(சி-53150)

## அறிவித்தல்

சுதுமலை குருகுல வர்க்கத்தவர்களால் 1943ஆம் ஆண்டு அப்போதைய வழக்கத்தின்படி குடி மக்களை சேவைக்கமர்த்தி கௌரவிப்பதற்காக வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "வண்ணகைப்பற்று" நிலப்பரப்பு 7 குளி 17.04 காணியானது 19324 இலக்க உறுதியின்படி அறுதி கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட தேவையானது தற்பொழுது நடைமுறையில் இல்லாத காரணத்தினால் குறிப்பிட்ட பொதுக் காணியினை கீழ்க் காணும் சுதுமலை வடக்கினைச் சேர்ந்த காணியற்ற 08 (எட்டு) வசதியற்ற குடும்பங்களுக்கு நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் தொண்டர் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படவிருக்கும் வீட்டுத் திட்டங்களுக்கு ஏதுவாக வழங்க இதற்காக தெரிவுசெய்யப்பட்ட குழுவின் சார்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. திரு.செல்லத்துரை செல்வநாயகம்
2. திரு.வேலாயுதபிள்ளை சந்திரலிங்கம்
3. திரு.செல்வநாயகம் ஜெகநாதன்
4. திரு.குருசாமி புவனேந்திரம்
5. திரு.இராசதுரை யோகநாதன்
6. திரு.பொன்னையா இராசதுரை (தங்கவேல்)
7. செல்வி இராசதுரை பாலராகினி
8. திரு. இராசேந்திரம் இராசகுமார்

(63192)

இவ்விடயம் சம்பந்தமாக மேலதிக விவரங்கள் தேவைப்படின் அல்லது ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் அதற்கான தகுந்த காரணத்துடன் பெயர், முகவரி மற்றும் கையொப்பத்துடன் இப்பிரசுர தினத்திலிருந்து பதின்னான்கு (14) நாள்களுக்குள் எனக்கு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுக் கடிதம் மூலம் அறியத்தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மா.தியாகராஜா, *சட்டத்தரணி, துளசி, ஆனைக்கோட்டை*

## இறைச்சிக்கோழி

புறொயிலர் இறைச்சிக்கோழி, சேவல் கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. (சுத்தம் செய்தல் இலவசம்)

தொடர்பு: **NEW R.S.K FARM**
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
(63140)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் சிக்கன் தேவையான அளவுகளில் ஆகப் பிந்திய விலைகளில் 12 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். **குமரன் பாம்**
227, பிறவுண் வீதி, (நரியன் குண்டடி),
யாழ்ப்பாணம்.
(63082)

## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

ஆவரங்கால் கிழக்கு புத்தூரில் யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் இரண்டு பரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0773013614
(63147)

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் சகல வசதியுடன் உள்ள வீடு ரெலிகொம் ரெலிபோனுடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
**70, நாயன்மார் வீதி, நல்லூர்.**
T.P. 222 9263
(63135)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை, சிவன் கோயிலுக்கு அருகில் நன்னீர் கிணற்றுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.

**நேரடித் தொடர்பு:**
தொ.பே. 0774084810
(சி-53126)

## விற்பனைக்கு

ஓடியோ றைக்கோடிங் செய்வதற்குரிய உபகரணங்கள் - மாஸ்ரர் ஸ்பூல்ரேப், கசெற் Akai கசற்டெக்குகள், அம்பளிபையர் ஈகுவலைசர், சி.டி பிளேயர், றைக்கோட்ஸ், றைக்கோட் பிளேயர் முதலியன மொத்தமாக விற்கப்படும்.

தொடர்பு: T.P. 0602214095
**வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில்.**
(63168)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ் குடும்பத்தைச் சேர்ந்த கொழும்பில் வசிக்கும் 1977 இல் பிறந்த மகம் 4ஆம் பாதம், கிரகபாவம் 54, செவ்வாய் 12 இல் உள்ள AAT படித்து Accounts Executive ஆக வேலை பார்க்கும் மணமகளுக்கு, படித்த வெளிநாட்டில் அல்லது கொழும்பில் வேலை பார்க்கும் மண மகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

விளம்பர இல. 2995, மே/பா உதயன்.
(63115)

## ஓராண்டு நெஞ்சை நீங்கா நினைவு

**அமரர் தாம்பசிவம் பாஸ்கரன் (பாசு)**
(உதயன் பத்திரிகை விநியோகஸ்தரும், சாரதியும்)

மலர்வு
06 - 11 - 1959



உதிர்வு
15 - 08 - 2006

*திதி: சப்தமி 05.08.2007*

அன்புக்கோர் அணிகலனாய் வாழ்ந்தீர்
பண்புக்கோர் இலக்கணமாய்த் திகழ்ந்தீர்
இன்ப வாழ்வில் எம்மிதயம் மகிழ்வித்த உம்மை
இவ்வுலகின்றும் காலன் அவன் கொண்டு சென்று
இன்று ஓராண்டும் ஆகிவிட்டதே! - எம்
நெஞ்சு பதைபதைக்க கதறுகின்றோம்
என் செய்வோம் நாம்? என்றும் உம்மை நினைத்தே
அஞ்சலி செய்கின்றோம் பெறுக சாந்தி!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பு மனைவி, மக்கள்,
பெற்றோர், உடன்பிறப்புகள், உறவினர்கள்.

மதவடி ஒழுங்கை,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(63151)

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் கணேசலிங்கம்

நீர்வேலி வடக்கு, இராஜவீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கணேசலிங்கம் 29.07.2007 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் தவபாக்கியத்தின் அன்புக்கணவரும் கலைச்செல்வன், பிரவலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயாசினி, சத்தியதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கனகலிங்கம், கணபதிப்பிள்ளை, நாகரத்தினம், இரத்தினசிங்கம், அருந்தவராணி ஆகியோரின் சகோரனும் காலஞ்சென்ற தவநாதன் மற்றும் தவமணி, தவகுணசீலன் ஆகியோரின் மைத்துனமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.08.2007 திங்களன்று ஜேர்மனியில் நடைபெறும்

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி மேற்கு,
இராஜவீதி
(கஜானன் மில்)

(63197)

தகவல்:
ஆ.நாகரத்தினம்
(சகோதரன்)

## Vacancy

**Nuffield School for the Deaf and Blind,**
**Kaithadi, Jaffna**
Church of Ceylon
Diocese of Colombo

Applications are invited for the post of
**Principal**

Graduates with teaching experience may apply.
Training in and a commitment to special education wil be an added qualification.
Applications should be supported by two recent recommendations marked "Confidential / Kaithadi Principal" on the top of the envelope and sent by Registered Post to:

**The Chairperson, Board of Trustees,**
**Ceylon School for the Deaf and Blind,**
**521 Galle Road, Ratmalana.**
**Closing Date: 15th September 2007**

(53149)

## SPOT ADMISSION

**Singapore, Malaysia, Belarus, Poland, Ukraine, Russia** மற்றும் **India** ஆகிய நாடுகளில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலும், பாடசாலைகளிலும் அனுமதி **மருத்துவம், பொறியியல், கலை, வர்த்தகம், சட்டம், கணனியியல், ஆங்கிலம் எல்லாத்துறைகளிலும் கற்கைநெறிகள்.**

**Singapore, Malaysia,** ஆகிய நாடுகளில் பாலர் வகுப்பு முதல் பாடசாலைகளில் அனுமதி பெற்றுத்தரப்படும் பெற்றோருக்கும் (VISA) பெற்றுத்தரப்படும். முதலீடு செய்ய, வேலை செய்ய, குடியேற (migration), வீடு வாங்க வசதிகள் செய்து தரப்படும். மேலதிக கல்விக்காக **UK, America, Canada** போன்ற நாடுகளுக்கு விசா பெற்றுத்தரப்படும்.

- A/L புள்ளி குறைந்த மாணவர்களுக்கு பிரத்தியேக ஏற்பாடுகள்.
- O/L மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள்
- வங்கி நிலுவைகள்,தூதரக நேர்காணல் தேவையில்லை
- 100% விசா உத்தரவாதம்
- விடுமுறைகள், **Seminar** போன்றவற்றுக்கு **Swiss, Italy, France, Germany, UK, America, Canada** போன்ற நாடுகளுக்கு செல்ல விசேட ஏற்பாடுகள் /அறிவுரைகள்.
- ரஷ்ய தூதரகத்தினால் (VISA) நிராகரிக்கப்பட்ட மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள். UK Appeals

இந்தியாவில் குறைந்த கட்டணத்தில் பெண்கள் மட்டும் கல்வி பயிலும் பல்கலைக்கழகத்தில் அனுமதிகள்
B.A.,(Tamil,English),B.Sc.,(Mathematics, IT, Microbiology, Chemistry,Home Science, Nutrition Foods Service Management and Dietetics) M.A., M.Com., M.Sc., போன்ற கற்கைநெறிகள்.
பாதுகாப்பான விடுதி, உணவு மற்றும் பல வசதிகள்

**PARANAN ASSOCIATE PRIVATE LIMITED**
**No:403 1/1,Galle Road,Wellawatte,Colombo-06**
**Tel:2556641 Hot Line:0777-370292 Fax:2551241**
**E-mail: parananassociatepvtltd@yahoo.com**

FLEX Graphic

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### சின்னராசா மகேந்திரன்

தோற்றம் 14.05.1970 | மறைவு 18.07.2006

*எம் குடும்ப விருட்சத்திற்கு*
*நீராகி, வேராகி, நின்று நிழல் பரப்பி*
*வாழ்வாங்கு நாங்கள் வாழ*
*வழியாவும் காட்டி வைத்து - இன்று*
*பாவிகளாய் எமையிங்கு*
*பதறியழ வைத்து விட்டு*
*பரமன் தாழ் அடைந்து விட்ட*
*எம் அன்புத் தெய்வமே!*

உறவினர்கள்.

காளிகோயிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.
(63195)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர் வரலாற்றில் இரண்டாவது சந்ததியைச் சேர்ந்தவர் வரதர் என்று அழைக்கப்பட்ட பொன்னாலை தி.ச.வரதராசன். அவர் ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வரலாற்றின் ஒரு முக்கிய நிறுவனமாக விளங்கும் 'மறுமலர்ச்சி' இயக்கத்தின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவர்.

1940இல் ஈழகேசரியில் அவரது முதலாவது சிறுகதை வெளிவந்தது. பல சிறுகதைகளை எழுதியவர். அவர் ஒரு கவிஞரும் கூட. மறுமலர்ச்சி, புதினம், வெள்ளி, தேன்மொழி, ஆனந்தன் ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியராக இருந்து அப்போது பல இளம் எழுத்தாளர்களை உருவாக்கியவர். சிறந்த கட்டுரையாளரும் ஆவார்.

பல சிறந்த நூல்களை வெளிக்கொணர்ந்த - வெளியிட்ட குடாநாட்டின் முன்னோடிப் பதிப்பாசிரியராகவும் பிரசுரகர்த்தாவாகவும் விளங்கியவர் வரதர்ஐயா.

ஈழத்தமிழரின் தமிழ் இலக்கியம் குறித்த ஒரு தொகுப்பாக - சிறந்த ஆவணமாக - ''வரதரின் பல குறிப்பு'' (Directory) ஒன்றை வெளியிட்டு சாதனை படைத்த பெருமைக்குரியவர் அவர்.

சாகித்தியரத்தினம் வரதரின் சிறுகதைத் தொகுதியான ''கயமை மயக்க''த்தில் அடங்கியுள்ள ''மாதுளம்பழம்'' வாசகர்கள் சுவைப்பதற்காக... இங்கே ... படித்துப் பாருங்கள்.

மூர்த்தி மாஸ்டர் நித்திரை விட்டெழுந்தார். ஆனால், அது விடியற்காலையல்ல. பிற்பகல் நாலரை மணி. வழக்கமாக 2மணிக்குப் பாடசாலையிலிருந்து வந்துசாப்பிட்டு முடிய 3மணியாகிவிடும். அந்தநேரத்தில் வேறு என்னதான் செய்ய முடிகிறது? ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினால் பதினைந்து நிமிஷத்தில் கண்ணைச் சுற்றிக்கொண்டு நித்திரை வந்துவிடும். பள்ளிக்கூடத்தில் சிறுவர்களோடு தலையுடைத்து விட்டு வந்த களைப்பை இந்த ஒன்றரை மணி நேர நித்திரை சிறிது ஆற்றி விடுகிறதென்று மூர்த்தி மாஸ்டர் நம்பினார்.

அடுத்த அத்தியாயம், கோப்பி குடித்துவிட்டு வெளியே கொஞ்சத் தூரம் உலாவப் போதல். மூர்த்தி மாஸ்டர் படலையைத் திறந்துகொண்டு தெருவுக்கு வந்தார். தெருவுக்கு வந்ததும் அவர் கண்ணிலேபடுவது ஒரு புளியமரம். அவருடைய வீட்டிலிருந்து நாலு வீடு தள்ளி நிற்கிற அந்தப் புளியமரம் அவர் கண்ணை உறுத்தும். அந்தப் புளியமரத்தின் கீழே இருக்கிற அந்தக் குடிசையும், அங்கே வாழ்வைக் 'கழிக்கின்ற' இரண்டு சீவன்களும் அவர் நெஞ்சை உறுத்துவன. 'ஏழைகள் உழைக்கும் சக்தியற்றவர்கள்' என்ற காரணத்தினாலே இந்த உலகத்தின் காலடியில் மிதிபட்டு நெளியும் பரிதாபத்துக்குரிய மக்கட் கூட்டத்தின் பிரதிநிதிகளாக 'ஆச்சிக் கிழவி'யும் அவளுடைய புத்திர செல்வம் 'பாக்கி'யும் அந்தக் குடிசைக்குள்ளே கிடந்தனர்.

புளியமரத்தடிக் குடிசையைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டு வந்த மூர்த்தி மாஸ்டர், புளியமரத்தைத் தாண்டி வெகுதூரம் வந்து விட்டார். இதோபிள்ளையார் கோயிலும் வந்து விட்டது. அங்கே கொஞ்சநேரம் தங்கிவிட்டு மறுபடியும் திரும்பி நடக்கவேண்டியதுதான்.

மூர்த்தி மாஸ்டர்பிள்ளையார்கோயிலுக்குப் போவது, தான் செய்த பாவங்களுக்கு மன்னிப்புக் கோரவோ அல்லது 'பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நாலுங் கலந்து,' கொடுத்து அதற்குப் பிரதிபலனாக 'ஏதாவதை' அந்தப் பெருமானிடமிருந்து பெறுவதற்காகவோ அல்ல. இன்னும் சரியாகச் சொன்னால் அவர் பிள்ளையார் கோயிலுக்கே போகிறதில்லை; கோயிலுக்குப் பக்கத்தில் குடியிருக்கிற ஐயர் வீட்டுக்குத்தான் போவார். எல்லாம்வல்ல அந்த விக்னேஸ்வரன், 'ஆச்சிக் கிழவி'களுக்குச் செய்யும் அநியாயத்தை கண்டு ஆத்திரம் கொள்வார் மூர்த்தி மாஸ்டர். ஆனால், அந்தப் பெருமானுக்குப் பூசை செய்யும் கணபதி ஐயரை, 'பாவம், நல்ல மனிதர்' என்று விமர்சனஞ் செய்வார். ஆமாம் கணபதி ஐயர் என்ன செய்வார். பிள்ளையாரைப் படைத்த சமூகம், அவருக்குப் பூசை செய்யவும் ஒரு பரம்பரையைச் சிருட்டித்து வைத்துவிட்டதே!

கணபதி ஐயர்தம்முடைய அறிவுக்கு எட்டியவரை நேர்மையாக நடக்கிறவர்; மனமறிந்து பிழை செய்யாதவர்; சாது. தானுண்டுதன்பாடுண்டு என்று வாழ்பவர். மூர்த்தி மாஸ்டருக்கு இந்தக் கணபதி ஐயரை நன்றாகப் பிடிக்கும். மூர்த்தி மாஸ்டர் புரட்சிகரமாகச் சிந்திப்பவர். 'கடவுள், சாமி, மந்திரம், பூசை' என்பனவெல்லாம் அழிக்கப்பட வேண்டிய மூடக்கொள்கைகள் என்ற வலுவான எண்ணமுடையவர். கணபதிஐயரோ, 'ஆயிரம் நாப்படைத்த ஆதி சேடன் தான் இந்த உலகத்தைச் சுமந்து நிற்கிறவன்' என்ற நம்பிக்கையுடையவர். இப்படி இருவருடைய கொள்கைகளும் வடதுருவம் தென் துருவமாக இருந்தபோதிலும், இருவரிடமும் 'மனிதத்தன்மை' என்கிற பண்பாடு இருந்ததினாலே ஒருவரையொருவர் காண்பதிலும் பேசுவதிலும் மகிழ்வு கொண்டார்கள்.

மூர்த்தி மாஸ்டர் தினமும் பிள்ளையார் கோயிலுக்குப் போய், ஐயரோடு ஒரு மணி நேரம் ஏதாவது பேசிக் கொண்டிருப்பார். பிள்ளையார் கோயிலில் அன்று நடந்த பூசை தொடக்கம், தமிழரசுக்கட்சியின் நடவடிக்கைகள் வரை பேச்சு நடக்கும். அபிப்பிராய பேதங்கள் வரும். ஆனால் அது மனத்திலே ஆத்திரத்தை உண்டாக்குவதில்லை.

கோயிலில் ஏதாவது விசேஷம் நடந்தால், அன்றைக்கு மூர்த்தி மாஸ்டருக்கு மோதகம், முறுக்கு முதலிய பலகாரங்களும் கிடைக்கும். வெற்றிலை, பாக்கு எந்த நாளும் தகரப்




பெட்டியோடு காத்திருக்கும். மாஸ்டருக்கு ஏதாவது சாப்பிடக் கொடுப்பதில் ஐயருக்கு ஒரு திருப்தி. மூர்த்தி மாஸ்டர் தமது மாமா டொக்ரர் சுந்தரமூர்த்தி வீட்டில் கிடைக்கும் 'உயர்ந்த' பலகார வகைகளைத் 'தொட்டுப் பார்க்கின்றவர்; இங்கே ஐயர் வீட்டிலோ மோதகத்தையும் முறுக்கையும் நன்றாகச் சுவைத்துச் சாப்பிடுவார்.

அன்றைக்கும் ஐயருடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு 'சரி நேரமாகிறது ஐயா! நான் வரப் போகிறேன்' என்று எழுந்தார்.

'கொஞ்சம் இருங்கோ மாஸ்டர்!'' என்று சொல்லிவிட்டு உள்ளே போன ஐயர், ஒரு மாதுளம்பழத்தோடு திரும்பி வந்து உட்கார்ந்தார்.

'' உங்களுக்குக் கொடுக்கவேணுமென்றுதான் எடுத்து வைத்தேன்; கதைப் பராக்கில் மறந்துபோனேன்'' என்று சொல்லிக் கொண்டே, பாக்குவெட்டியால் பழத்தை இலேசாகக் கீறி உடைத்தார். ஒரு பாதியைப் பிரித்து ஒரு கடதாசியில் முத்துக்களை உதிர்த்தி, ''சாப்பிடுங்கோ மாஸ்டர்'' என்றார்.

ஆகா, என்ன இனிமை! 'ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித்து'க் கொடுப்பதனால் மாத்திரமல்ல; உண்மையாகவே அந்த முத்துக்கள் பார்ப்பதற்கும் மொழுமொழுவென்று, கொழுத்துத் தடித்த பணக்கார வீட்டு இளம்பெண்ணின் கன்னத்தைப் போல இருந்தன. தின்பதற்கும் தமிழைப் போலச் சுவைத்தன.

இந்தச்சமயத்தில் ஐயரின் கடைக்குட்டி - லிங்கேச்வர சர்மா - ஓடி வந்து, '' அப்பா! அப்பா! நேக்கு மாதாளம்பழம் ஒணும்' என்று சொல்லிக்கொண்டே கீழே கிடந்த பாதியை எடுத்து ஒரு கடி கடித்தான். பழத்தோடு தோலும் சக்கையும் சேர்ந்து அவனுக்கு கசந்திருக்கவேண்டும்.

''ஆய்க்!... கக்கா!...'' என்று சொல்லிக் கொண்டே அதைத் தூர வீசி எறிந்தான். அருமையான பழம் - சரி பாதி - குப்பை மண்ணிலே போய் உருண்டு புரண்டது!

''ச்சீ, வாடா இங்கே'' - ஐயர் ஏசினார்.

''போகட்டும், அதைச் சாமி எடுத்துக்கொண்டார் என்று நினைத்துக் கொள்ளுங்கள்'' என்று கேலியாகவோ சமாதானம் சொல்லினார் மூர்த்தி மாஸ்டர். ஐயர் கோபிக்கவில்லை. சிரித்தார். ''நீங்கள் பகிடி பண்ணுகிறீர்கள். ஆனால் உண்மையும் அதுதான்'' என்று சொல்லி மனம் ஆறினார்.

''சரி, வருகிறேன் ஐயா'' என்று விடைபெற்றுக்கொண்டு மூர்த்தி மாஸ்டர் வீட்டுக்குத் திரும்பினார். பொழுதும் பட்டுக்கொண்டிருந்தது. இதோ, ஆச்சிக்கிழவியின் குடிசையைக் காத்து நிற்கும் புளியமரம்! கிழவியின் குடிசையிலே வெளிச்சத்தைக் காணோம். அவளுடைய தகர விளக்கிலே மண்ணெண்ணெய் காய்ந்துவிட்டதோ என்னவோ!

ஒளியைக் காணவில்லை. ஆனால் ஒரு ஒலி மாத்திரம் வந்துகொண்டிருந்தது.

'உங் ஊங்...'' - அழுகிற சத்தம் கிழவியின் குரலல்ல; பாக்கியின் குரல்.

இல்லை; அது பாக்கியின் சத்தமல்ல, பசியின் சத்தமென்று மூர்த்தி மாஸ்டர் நினைத்தார். சட்டைப் பையிலே கையை விட்டார். ஏதோ, சில்லறை கிலுங்கிற்று. அதைச் சுமந்துகொண்டு வீட்டுக்குப் போக மனமில்லாமல், ஆச்சிக் கிழவியின் படலையைத் திறந்துகொண்டு உள்ளே போனார்.

''ஆரது?...எடி, கத்தாதையடி; ஆரோ வருகினம்...''

''நான் தான் ஆச்சி''

''வாத்தியாரா? வாருங்கோ''

''ஆர், பாக்கிமா அழுகிறது? என்னவாம்?''

அதை ஏன் கேட்கிறியள் வாத்தியார்! உந்த முற்றத்தில் நிற்கிற மாதாளையிலை இந்த வருஷந்தான் ஒரே ஒரு பிஞ்சு பிடித்திருந்தது. அதை அணில் கிணில் கொத்தாமல் கட்டிக் காத்து இன்றைக்குத்தான் பிள்ளையாருக்குக் கொண்டுபோய் கொடுத்தனான்... இந்த மூதேவி மத்தியானம் போய் மரத்தைப் பார்த்துவிட்டு அதைக் காணவில்லையென்று ஒரேயடியாய்ச் சிணுங்கிக்கொண்டிருக்கு... எங்களிடம் அபிஷேகம் பூசை செய்யக் காசுபணந்தான் இல்லை. இந்த ஒரு பழத்தை என்றாலும் கொடுப்போமென்றுதான் கொடுத்தேன்...''

கிழவி சொல்லிக்கொண்டே போனாள். மூர்த்தி மாஸ்டருக்கு வயிற்றுக்குள்ளே என்னவோ செய்வது போலிருந்தது. ஐயர் வீட்டிலே தின்ற அந்த மாதுளம்பழத்தின் சாறு வயிற்றிலே கொதித்துக் குமுறியது. லிங்கேச்வரசர்மா குப்பைமேட்டிலே சுழற்றி எறிந்த மாதுளம்பழப்பாதி கண்முன்னே ஓடிவந்து கேலியாய்ச் சிரித்தது. கண்களை ஒருமுறை மூடி அதை அப்புறப்படுத்தினார். பிறகு, சட்டைப் பையிலிருந்த ஐம்பது சதத்தை எடுத்துப் பாக்கியிடம் கொடுத்து, ''மாதுளம்பழம் கூடாது; நீ கடையிலே போய் மாம்பழம் வாங்கிச் சாப்பிடு'' என்று சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தார்.

இப்போது வயிறல்ல; அவருடைய நெஞ்சு கொதித்தது, இந்த நிலை கெட்ட மாந்தரை நினைந்து! ★

# உங்கள் இராசிக்கு இந்த வாரத்துப் பலன்

(05.08.2007-11.08.2007 வரையுள்ள)

சோதிடர் சண்

## மேடம்

இந்த வாரம் உங்களுக்கு சனிபகவான் 5ஆம் வீடான சிங்கராசிக்கு இடம்பெயர்ந்து செல்வதால் இதுவரை சொத்துடைமை சம்பந்தமான கஷ்டங்கள் தீரும். ஈடுவைத்த உடைமைகளை மீட்டுக்கொள்வீர்கள். தாய்வழியால் ஏற்பட்ட பகை நீங்கும். கால்நடை, கமம் போன்ற தொழில்செய்வோர் நன்மை அடைவர். புதிய முதலீடுகள் நன்மை தரும்.

மாணவர்களுக்கு கல்விநிலை மேன்மை தரும். குடும்பஸ்தர்களுக்கு குடும்ப நிலை சமபலன் தருவதுடன் சிலருக்கு இருதயம், வயிறு போன்றவற்றுடன் வருத்தமும் சிகிச்சையும் ஏற்படும். முக்கியமாக கர்ப்பிணித்தாய்மார்கள் அவதானம் பேணவேண்டும். உத்தியோகஸ்தர்கள், தொழிலாளர்களுக்கு தொழில்நிலை மாற்றமும் சமபலனும் தரக்கூடிய வாரமாகும்.

## இடபம்

உங்களுக்கு இந்தவாரம் செவ்வாய், சந்திரன் சேர்க்கையும் குருபார்வையும் நன்மைகள் தரும். குடும்ப சுகமுண்டு. குடும்பத்தில் மங்களகரமான சம்பவங்களுக்கு அனுகூலமான நிலை ஆரம்பிக்கும். காதலர்களுக்கு களிப்பூட்டும் வாரம். குடும்பஸ்தர்களுக்கு கடல் கடந்த நாட்டு நற்செய்தி, பணவரவு கிட்டும். சகோதர ஒற்றுமை ஏற்படும்.

வாகனம், ஆதனம், உடைமை சம்பந்தமாக பிரச்சினைகள் ஏற்படும் கொடுக்கல், வாங்கலில் அவதானம் வேண்டும். புத்திரரால் சுகமுண்டு. கால்நடைகள் கைவிட்டுப் போக இடமுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் சமபலனும் உத்தியோகஸ்தர், தொழிலாளர்களுக்கு தொழிலால் வருமானமும் உயர்நிலையும் உண்டு. வாகனம் ஓட்டுநர்கள் மிக அவதானத்தை கடைப்பிடிக்கவேண்டும்.

## மிதுனம்

உங்களுக்கு இந்தவாரம் ஏழரைச் சனிபகவானின் கடைக்கூறு காலம் முற்றாக கழியும் வாரமாகும். இதுவரை இருந்த குடும்பச் சுமைகள் நீங்கி சுகம் ஏற்படும். கண்டத்திற்கு மேற்பட்ட சுகயீனங்கள் குணமாகும். திருமணத்தடை நீங்கும். திருமண வயதுடையவர்களுக்கு திருமணம் கைகூடி வரும். கடற்பிரயாண நன்மையுண்டு. மனநெருக்கடியும் கடன்படவும் நேரிடும்.

குடும்பஸ்தர்களுக்கு சமபலன் தரும் வாரமாகும். தொழிலாளர், உத்தியோகஸ்தர்களுக்கு தொழில்நிலையில் குரு நன்மை தரும் கிரகமாகையால் பாதிப்பாக இருக்காது. சனி, கேது சேர்க்கை சகோதர வழிக் கஷ்டங்களைத் தரும்.

## கடகம்

உங்களுக்கு இந்தவாரம் ஏழரைச் சனிபகவானுடைய நடுக்கூறு காலம் நீங்கிக் கடைக்கூறு ஆரம்பிக்கும் வாரமாகும். குடும்பஸ்தானத்தில் குழப்பநிலையைத் தரக்கூடிய வாரமாகும். திருமண வயதுடையவர்களுக்கு திருமணப்பேச்சு பல முட்டுக்கட்டைகளைத் தந்து குழப்பிவிடும். கண்டத்திற்கு மேற்பட்ட சுகயீனங்கள் ஏற்படும். பல் வருத்தமும் சிகிச்சையும் ஏற்படும். சொல்லுக்கும் செயலுக்கும் மதிப்பில்லாது போய்விடும்.

குரு 5இல் இருப்பது புத்திரசுகம், புத்திரரால் மதிப்பும் ஏற்படும். தொழில் செய்வோர் உத்தியோகஸ்தர் நன்மை அடைவர். பணவரவு ஓரளவு நன்மை தரும். குடும்பத்தில் வேண்டப்படாத பிரச்சினைகள் சத்துருக்களால் உருவாகும். மாணவர்கள் கல்வி நிலையில் நற்பலன் பெறுவர்.

## சிங்கம்

உங்களுக்கு இந்தவாரம் ஏழரைச் சனிபகவானுடைய நடுக்கூறு ஆரம்பிக்கும் வாரமாகும். இதனால் சந்திரன், கேது, சனி சேர்க்கை சோதனைகள் தரும் வாரமாகவே அமையும். தாய்வழித் துன்பம், இரத்தக்கொதிப்பு மற்றும் இரத்தம் கெடக்கூடிய சுகயீனங்கள், திருமணப் பேச்சுகள் முட்டுக்கட்டை தரும், பொதுவாக குடும்பஸ்தர்களுக்கு எதிர்நீச்சல் தரும் வாரமாகும். இனசன விரோதம், பகை மற்றும் ஏமாற்றம் தரக்கூடிய நிலையுண்டு. தொழிலாளர், உத்தியோகஸ்தர்களுக்கு தொழிலால் இடமாற்றம், புதிய சூழ்நிலை உருவாகும். பணநிலை சமபலன் தரும். கடல் கடந்த நாட்டுப் பிரயாணம் நன்மை தரும்

## கன்னி

இந்தவாரம் உங்கள் இராசிக்கு 12ஆம் வீட்டில் ஏழரை முற்கூறாக சனிபகவான் சஞ்சரிக்க ஆரம்பிக்கும் வாரமாகும். எனவே இந்தவாரம் தலைக்கு உபாதை தரக்கூடிய பிரச்சினைகள் வரக்கூடும். இது சிலருக்கு மறதி, மயக்கம், தலையிடி, தலைக்காயம் போன்றவற்றையும் தர இடமுண்டு. மேலும் சிலருக்கு கண்ணில் சிகிச்சை செய்யவேண்டிய பலனும் உண்டு. குடும்ப சுகம் மட்டமான பலனையும் சகோதரர்களால் நன்மை தராத பலனும் ஆதன பூமி, பணம், பொருள் சுமாரான பலனையும் தருவதுடன் குடும்பத்தில் புத்திரரால் செலவு மற்றும் பிரயாணத் தொல்லையும் ஏற்படும். கடன் கொடுத்தாலும் வாங்கினாலும் வேதனை தரும் பலனே உண்டு. கடல் கடந்த நாட்டில் தொழிலுக்குச் செல்வோர்கள் தடையில்லாத நன்மை அடைவர்.

## துலாம்

உங்களுக்கு இந்தவாரம் லாபம், சுகம் தரக்கூடிய இடமான 11ஆம் வீட்டில் சனிபகவான் வரும் வாரமாகும். நற்பலன் தரக்கூடிய வாரமாகும். குரு குடும்பஸ்தானத்தில் இருப்பதால் பணவரவு, நண்பர்கள் வருகை, வெளிநாட்டுச் செய்திகள் குடும்ப நன்மை தரும் பலனாகவும் அமையும். கொடுக்கல் வாங்கலால் எதிர்பார்த்த வரவு தடைப்படும். சிலருக்கு சந்திர ராசியை சனி பார்ப்பது வாதம் சம்பந்தப்பட்ட ரோகங்களும் சிகிச்சையும் தரும்.

சகோதரர்களால் நன்மையுண்டு. புதிய வீடு, கட்டடம் அமைப்பதில் தடை ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் சிறப்பான பலன்தரும். உத்தியோகத்தர்களுக்கு உயரதிகாரிகளால் பாராட்டும், நன்மையுமுண்டு. வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் சமநிலை ஏற்படும். முதலீடு செய்து பெருந்தொழிலில் ஈடுபடுபவர்கள் குறைந்த லாபத்தால் மனச்சோர்வடைவர்.

## விருச்சிகம்

உங்களுக்கு இந்தவாரம் ஜன்மத்தில் குருவும் 10இல் சனி, கேதுவும் இருப்பது தொழில்நிலையில் புதிய மாற்றத்தைக் கொண்டுவரும். ஆனாலும் கடந்த காலத்தைவிட நன்மை தரும். தொழிலுக்கு மனுச்செய்தவர்கள் நன்மை அடைவர். ஆசிரியர், மாணவர்களுக்கு கல்வியால் உறவுநிலை மேம்படும். குடும்பஸ்தர்களுக்கு மாமன் வழியால் நன்மையுண்டு. புத்திரரால் பெருமை பெறுவர். திருமண வயதுடையவர்களுக்கு வெளிநாட்டுத் திருமணம் கைகூடும். தொழிலாளர், வர்த்தகர்கள், உத்தியோகஸ்தர்களுக்கு சமபலன் தரக்கூடிய வாரமாகும்.

## தனுசு

உங்களுக்கு இந்தவாரம் அட்டமத்துச் சனிபகவான் விலகிய வாரமாகும். எனவே இதுவரை இருந்துவந்த குடும்ப இன்னல்கள் தீரும். சகோதர பகை நீங்கும் கடல்கடந்த நாட்டுப் பிரயாணத் தடை நீங்கி நன்மை தரக்கூடிய பலன் உண்டு. கடல்கடந்த நாட்டிலிருந்து வரும் செய்தி பணவரவுடன் கூடிய செய்தியாக பலன் தரும். குடும்பஸ்தர்களுக்கு குடும்ப சுகம் ஏற்படும். கணவன், மனைவி உறவுகள் மேம்படும். உறவினர் வருகை மகிழ்ச்சி தரும். மாணவர்களுக்கு கல்விநிலை நற்பலன் தரும். தொழிலாளர், வியாபாரிகள், உத்தியோகஸ்தர்களுக்கு புதன்கிரகம் நன்மை தரும். வைத்திய தொழில் செய்வோர் சிலருக்கு கடல் கடந்த நாட்டுப் பிரயாணமும் தொழிற்கல்வியும் நன்மை தரும். 12இல் குரு நிற்பதால் செலவு அதிகரிக்கும். ஆனாலும் செய் தொழிலால் கீர்த்தியுண்டு.

## மகரம்

உங்களுக்கு இந்தவாரம் 7ஆம் இடத்திலிருந்த சனிபகவான் அட்டமத்திற்கு கால்வைக்கும் வாரமாகும். ஆனாலும் குருபகவான் 11இல் நின்று துன்பங்களைத் துடைப்பார். பண வருவாயிலும் செல்வாக்கு நிலையிலும் [illegible]பைத் தரமாட்டாது. காயப்படக்கூடிய கஷ்டங்கள் வந்து நீங்கும். குடும்பஸ்தர்களுக்கு ஏழரை மாதிரி இருந்த துன்பநிலை மாறும். தொழில் நிலையில் சமபலன் உண்டு. 11ஆம் இடத்தில் குரு நிற்பது லாபம், சுகம் தரும் வாரமாகும். மாணவர்களுக்கு கல்வி நிலையில் பெறுபேறுகளால் அதி உச்ச நன்மை பெறுவர். தொழிலாளர், உத்தியோகத்தர்களுக்கு நன்மை தரும் வாரமாகும். தடைப்பட்ட பிரயாணம் தடை நீங்கி நன்மைதரும்.

## கும்பம்

உங்களுக்கு இந்த வாரம் 6ஆம் வீட்டிலிருந்த சனிபகவான் 7 ஆம் வீட்டை நோக்கிச் செல்வது சத்துருபயம் நீங்கும். நோய், துன்பங்கள் நீங்கும் மாமன்வழியால் ஏற்பட்ட பகைநீங்கி உறவு நிலை மேம்படும். திருமண வயதுடையவர்களுக்கு திரு மணப்பேச்சு நன்மைதரும். புத்திரரால் சுகமடைவர். சிலருக்கு கடல் கடந்த நாட்டுக்கு புத்திரர் செல்வதற்கு மிக உகந்தநிலை ஏற்படும். குடும்பஸ்தர்களுக்கு குடும்பப் பொறுப்பு, இறுக்கமான, நிலைக்குத் தள்ளப்படும். கணவன், மனைவி உறவு நிலை புறச்சூழலால் பாதிப்பைத்தரும். மாணவர்களுக்குக் கல்வி நிலையில் முன்னேற்றம் கிடைக்கும். வியாபாரிகள், தொழிலாளர், உத்தியோகஸ்தர்களுக்கு இட மாற்றம், அலைச்சல் ஏற்பட்டு நன்மைதரும் பலனே கிட்டும்.

## மீனம்

உங்களுக்கு இந்த வாரம் 5 ஆம் இடத்திலிருந்த சனிபகவான் 6 ஆம் வீட்டுக்குச் செல்வது, இதுவரை இருந்த மனச்சுமை நீங்கும். சிலருக்கு இருதயம், சலாசயம், வயிற்றுடன் கூடிய சுகயீனங்கள் வருத்தம் நீங்கி சுக பலனைத்தரும். புத்திரரால் ஏற்பட்ட கவலை நீங்கும். குரு 9ஆம் வீட்டிலிருப்பது பண வர வைத்தரும். நீண்டநாள் தடைப்பட்டிருந்த வருமதிகள் வந்துசேரும். குடும்பஸ்தர்களுக்கு குதூகலம்தரும் வாரமாகும். சிலருக்கு குடும்பமாகக் கடற்பிரயாணம் செய்யப் பலன்வரும். மேலும் 6 இல் சனி சேர்க்கை காலில் காயப்படக்கூடிய அல்லது விபத்துகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங் களும் வர இடமுண்டு. வேண்டப்படாத சேர்க்கை, சகவாசம் வீண்வம்புகளைத்தரும். வியாபாரிகள், உத்தியோகஸ்தர்களுக்கு வருமானம், பணப்புழக்கம்தரும் வாரமாகும். புதிய தொழில் புரிவோர்க்கு லாபம், சுகம் தரும் பொதுவாக நன்மைதரும் வாரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ்.நகரில் புதிதாகத் திறக்கப்பட இருக்கும் விமானப் பொதிகள் சேவை கிளைக் காரியாலயத்திற்கு அலுவலகப் பொறுப்பாளர், வேலையாள்கள் (இருபாலரும்) உடனடியாகத்தேவை. மும்மொழிகளிலும் திறமையானவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

யாழ் - கொழும்பு விமான சேவை கிளைக்காரியாலயத்திற்கு ஏற்ற இடவசதியுள்ள வீடு/கடை யாழ்.நகரில் தேவை. (ச/53138)

**தொடர்புகளுக்கு :- 0773846998, 0773561891**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### காயத்திரி
(கவிதா)

எங்கள் குடும்பத்தின் முதல்
மலராய் மலர்ந்த செல்வமே!
பாசத்தின் இருப்பிடமே!
பண்பான மகளே! கவிதா!
பார்க்கும் இடமெல்லாம் உன்
முகம்தான் தெரியுதம்மா
கவிதா என்று இனி
யாரைச்சொல்லுவது
ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உன்
நினைவுகள் மாறாதம்மா!.

தாயின் மடியில் 16.01.1984
ஆண்டவன் அடியில் 16.07.2006

உன் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குணபாலசிங்கம் (அப்பா),
அம்மா,
சகோதரர்கள், பிள்ளைகள்.

காளிகோயிலடி,
மூளாய். (63181)


## காட்போட் பெட்டி விற்பனைக்கு

சுருட்டு ஏற்றுமதியாளருக்கு பொதி செய்யக் கூடிய பெரிய காட்போட் பெட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**சிவா நறுமணப்பூங்கா,**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
T.P.No. 021 222 2567 (தி/53147)

## வீடு வாடகைக்குண்டு

ஆஸ்பத்திரி வீதி (ஸ்ரேசன் சந்தியில்) சகல வசதிகளுடனும் கூடிய மேல் மாடி வீடு (புத்தம் புதிய) வாகனத்தரிப்பிடத்துடனும் வாடகைக்குண்டு.
(அரச, தனியார் நிறுவனங்களுக்கு விரும்பத் தக்கது).

தொடர்புகொள்ளவேண்டிய
தொலைபேசி இல:-
077 6049123, 077 6965436 (63186)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (63050)

## வீடு வாடகைக்கு

யாழ். இந்துக்கல்லூரிக்கு மிக அண்மையில் கில்னர் ஒழுங்கையில், ஒரு மாடி வீடு வாடகைக்கு உண்டு. வாடகை, முற்பணம் பேசித்தீர்க்கலாம். மேலும் விவரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.இல.:- 0112 605735 (சி-53126)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி நளாயினி குமுக்கேசன்
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி கற்பகத்தரசி அழகக்கோன்**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை. (தி/53145)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 26 ★ 09 ★ 1947



இறப்பு 15 ★ 08 ★ 2006

அமரர்
### கந்தையா குலசிங்கம்
திதி : ஸப்தமி (05.08.2007)

உருவம் மறைந்தாலும்
உன் நினைவுகள்
உள்ளத்தில் நிலைத்திருக்கும்

94/14, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம். (63146)

நீங்கா நினைவுகளுடன் ...
குடும்பத்தினர், உறவினர்கள்.

## எங்கள் தெய்வத் திருத்தந்தையின்
## ஆறாவது ஆண்டு நினைவுத் திருவஞ்சலி

உதயம்
01.07.1938



அஸ்தமனம்
11.08.2001

### அமரர் பொ. சங்கரப்பிள்ளை (J.P)
(முன்னாள் அதிபர்: யா/உடுத்துறை மகாவித்தியாலயம்)
திதி: அமரபக்க ஸப்தமி 05.08.2007

ஐயா...!
தேரிடறி வீழ்ந்த -எங்கள்
தெய்வத் தளபதியே...!
நேரிய நோக்கே
நீதியின் சோதியே
நிமிர்ந்திட்ட இமயமே...!
யாருக்கும் அஞ்சிடா
நியாயப் பெருந் தீயே!- எங்கள்
நேசத் தந்தையே...!

உங்கள்
பொன்னகை முகத்துடனும்

பொழிலான சிரிப்புடனும்
அன்பாய் அருகிருந்து
அணைத்தெடுத்த சுகத்துடனும்
நெஞ்சம் நெக்குருக
இன்றும் வாழ்கின்றோம்
என்றும் வாழ்வோம்...!

எங்கள் தெய்வத் தந்தையின் ஆத்மா இறைசேவடிகளில் நித்திய பேரின்பம் பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்!!.
ஓம் சாந்தி!

உங்கள் நினைவுகளுடன் வாழும்:
அன்பான மனைவி,
[illegible]
[illegible]

உடுத்துறை தெற்கு,
தாளையடி.
(63120)

## அகலவை ஒன்றாகியும் அகலா நினைவுகள்

குழந்தையாய் மண்ணில் 30 - 12 - 1982



குமரனாய் விண்ணில் 15 - 08 - 2006

### சின்னையா சிவசங்கர்
(யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட கணித சிறப்புக்கலை 3ஆம் வருடம்)
*திதி : அபரபட்ச ஸப்தமி (05.08.2007)*

கனவுகளோடு கல்வியுலகில் கால்பதித்து
கலாசாலை வளாகமதில் காளையாய் வலம் வந்தாய்
எண்ணமதில் ஏராளம் கற்பனைகள் - உன்
உறவுகளின் உள்ளமதில் ஆயிரம் சொப்பனங்கள்
அத்தனையும் உண்மைக் கனவாகிக் கலைந்ததுவே
சங்கர்...நீ சிரித்த முகமுமாய் கனிந்த மொழியுமாய்
எம் கண்ணருகே நிழலாட எங்கு சென்றாய்
அகலவை ஒன்றென்ன ஆயிரம்தான் - ஆனாலும்
ஆகாது உன்னை மறக்க
எம் உயிரோடு கலந்து விட்ட உத்தமனே
எம் உள்ளம் உருகி வேண்டுகின்றோம்- உன்
ஆத்ம சாந்திக்காய்.

வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம். (சி/53148) -குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### பாலசிங்கம் சுரேஸ்

திருநெல்வேலி, சிவன் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பாலசிங்கம் சுரேஸ் (03.08.2007) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பாலசிங்கம் - ரஞ்சி தம்பதியரின் அன்பு மகனும், துசியந்தன், சுபாசினி, சுமன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற நடேசு மற்றும் சண்முகவடிவு ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-08-2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன்வீதி,
திருநெல்வேலி. (63191)

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரத மாதாவுக்கு ஒரு விண்ணப்பம்!

## வல்வைப் படுகொலை நாளில் எழுந்த ஆதங்கம் இது



பாரத நாட்டிற்கொரு வேண்டுகோள்!

02.08.1989இல் வல்வை நகரைசுடுகாடாக்கிய அந்தப் பயங்கரச்சம்பவங்களை நினைக்க நெஞ்சமே வெடிக்கும்போல்உள்ளது. 1½ வயது சிசு உட்பட 70 வயது மூதாட்டி வரை வெட்டியும் சுட்டும் உயிருடன் எரித்தும் இந்திய அமைதிப் படையினர் படுகொலை புரிந்தனர்.

இந்த வெட்கம் கெட்ட படுகொலைகளைப் பல சர்வதேச ஊடகங்கள் ''அமெரிக்க இராணுவத்தால் வியட்நாமில் நடத்தப்பட்ட மைலாய் படுகொலைகளையும்'', ''இந்தியாவில் ஆங்கிலேயரால் அமிர்தசரசில் நடத்தப்பட்ட ஜாலியன் வாலாப் படுகொலைகளையும்'' விடக் கொடூரமானவை என வர்ணித்தன.

3 நாள்கள் தொடர்ந்து இந்த வெறியர்ட்டம் நடந்தேறியது.

இதற்கெல்லாம் பிராயச்சித்தம் வேண்டாமா? இச்சம்பவத்தின் பின் அடுத்த பரம்பரையில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

இன்று உள்ள இந்திய அரசானது ஏன் பாராமுகமாக இருக்கிறது?

பாரததேசம் தன் நாட்டின் தலைமைப் பதவியில் முதன்முதலில் ஒரு பெருமைக்குரிய பெண்ணைத் தேர்ந்தெடுத்து, ராஜ்ய பவனில் விழா எடுத்துள்ளார்கள். அதே வேளைமொழி வேறுபாடு, இனபேதமற்ற, மதசார்பற்ற, தலைசிறந்த விஞ்ஞான மேதையான டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் இந்தியாவின் முதன் மனிதனாக இதுவரை காலமும் இருந்துவிட்டு அமைதியின் வடிவமான, எளிமையின் உருவமாக தன் வாசஸ்தலத்திலிருந்து இரண்டே இரண்டு சூட்கேஸ் பெட்டிகளை (புத்தகங்கள்) எடுத்துக்கொண்டு வெளியேறியது அகில உலகிலும் பலரதும் பார்வையை ஈர்த்தது.

அது இந்திய நாட்டு மக்களுக்குக் கிடைத்த கௌரவம் ஆகும். பார்வையிலே எளிமையான மனிதர். அடக்கத்தின் முழு வடிவம் அமைதியாக கூறிய வார்த்தைகளில் சமுதாயத்தை மதிக்கும்பண்புதான் ஒரு முஸ்லிமாக இருந்தபோதிலும் இந்து மதத்திலுள்ள உண்மையை வெளியுலகிற்கு உதாரணமாகக் காட்டிய தன்னிகரற்ற தன்மை, அவரது இடத்தை, பதவியை வகித்திட வந்திருக்கும் பெருமைக்குரிய பெண்மணி பிரதீபா பட்டேல் அம்மையாரின் உள்ளத்தையும் கவர்ந்திருக்கும். அவரும் தனது பதவிக்கு மேலாக இந்தியாவின் பெருமையைப் பாதுகாத்து விளக்குவார் என்பதாலேயே அப்பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

இவ்வாறான பெருமைகள் பெற்ற பாரத மாதாவிற்கு பூகோள ரீதியாகவும் உறவாலும் அருகே இருக்கும் ஈழத்தமிழர்கள் சிந்தும் கண்ணீர், வாழும் அவல வாழ்க்கை கடந்த மூன்று சகாப்தங்களுக்கு மேலாக ஓர் உறுதியான முடிவை எடுத்து எமது பிரச்சினையைத் தீர்த்து வைக்காமையால் இன்றும் கொழுந்து விட்டு எரிகின்றது.

ஈழத்தமிழர்கள் மீது கரிசனை கொண்டு இந்திரா காந்தி அம்மையார் காட்டிய அக்கறை அனைத்தும் அவரது அகால மரணத்தின் பின்பு அதுவும் அக்கினியுடன் சங்கமமாகிவிட்டது. அங்கே மாறிவரும் தலைவர்கள் தங்கள் நாட்டிற்கு பெருமை தேடித்தர எத்தனையோ மொழி பேசும் அனைவரையும் பேதமற்ற நிலையில் ஆட்சி செலுத்தும்போது, இங்கு சிறிலங்காவில் மாறி மாறி வரும் தலைவர்கள் தங்கள் காலங்களில் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விடுகின்ற இனப்படுகொலைகளால் அவர்களது ஈனச் செயலால், அரச அட்டூழியங்களால் இராணுவ கெடுபிடிகளால் புலம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் உலக நாடுகளின் கண்கள் திறக்கப்பட்டுள்ளன. எல்லோரும் ஈழத்தமிழ்களுக்காக குரல் கொடுத்தபோதிலும்எமது விடிவற்ற பொழுதுகள் தான் இன்னும் நீண்டுகொண்டு செல்கின்றன. படுகொலைகள் பட்டியலும் நீள்கின்றது. அந்தவரிசையில்,



வல்வைப் படுகொலையின் குரூரக் காட்சிகள் இரண்டு.

''வல்வைப் படுகொலை'' நடந்து முடிந்து இன்றோடு 18 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. ஆனாலும் அந்த குருதி படிந்த அடையாளங்கள், யுத்த வடுக்கள் அதனைச் சுமந்து செல்லும் உறவுகளால் இலகுவில் மறப்பதற்கில்லை. ஆயினும் இன்னும் இந்தியா மீது கொண்ட நம்பிக்கையை ஈழத்தமிழர் மறக்கவில்லை.

அமைதிக்காக வந்த அமைதிப்படை அரங்கேறிய ''வல்வைப் படுகொலை''யின் பின்னர் சிறிலங்கா அரசு தான் நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயப் படுகொலை, நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை, யாழ்.பொது மருத்துவமனைப் படுகொலை, இன்னும் மேலாக மூதூர் தொண்டர் நிறுவனப் பணியாளர்படுகொலை மற்றும் வீதியோர படுகொலைகள், மனித உரிமை மீறல்கள், கடத்தல்கள், கப்பம் கோரல் போன்றவற்றால் ஈழத்தமிழர்கள் நொந்து போயுள்ளனர். அவற்றிலிருந்து தப்புவதற்காகக் அகதி என்ற [illegible]தைச் சுமந்து பாரத மண்ணிற்கே படை[illegible]க்கின்றார்கள். தஞ்சம் என வந்தவர்கள் ஆத[illegible]க்கும் இந்திய தேசம், ஒரு முறை - ஒரே ஒருமுறை - தீர்க்கமான முடிவு எடுத்து ஈழத்தமிழர் நலத்தினை உறுதிப்படுத்த முடியாதா? இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நீ ஒரு வல்லரசு அல்லவா இந்தியாவே.

தேவாலயங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், பழம் பெருமை பேசும் பண்பாட்டுத் தலங்கள் எவற்றையுமே விட்டு வைக்காது அவற்றை நிரந்தர அழிவுச் சின்னங்களாகப் பதிவுசெய்து வரும் இலங்கை அரசுகள் தான் எம்மை மாறி மாறி ஆட்சி செய்கின்றன. ஈழத்தமிழர் பிரச்சினையில் இப்போது பாரத மாதா பாராமுகமாக கண்ணை மூடிக் கொண்டிருக்க எந்தவிதமான நியாயமும் இல்லை. தார்மீகப் பொறுப்பை ஏற்று வழிநடத்தி ஈழத்தமிழர் பால் இந்திரா அம்மையார் காட்டிய அக்கறையை அந்த ஒப்பற்ற சீரிய பணியை இனியும் காலம் தாழ்த்தாது எமது அவல வாழ்விற்கு முற்றுப்புள்ளியிட்டு ஈழத்தமிழர்கள் தமக்கு உரிய - அவர்களிடம் இருந்து பிரிக்க இயலாத - உரிமைகளுடன் வாழ்வதற்குப் பாரத தேசத்தின் கண்கள் விரைவில் திறந்திட வேண்டி நிற்கின்றோம்.

இந்திரா காந்தி அம்மையாரால் தொடங்கப்பட்ட நற்பணியை முன்னெடுத்து தற்போது முதன்மைப் பெண் ஸ்தானத்தில் ஜனாதிபதி பிரதீபா பட்டேல் அம்மையார் முடித்து வைக்க முடியாதா? அப்பொழுது தமிழினம் முழுவதும் தலை நிமிர்ந்து வாழும் நிலை உண்டாகாதா? இந்தியாவின் முதன்மைப் பெண் உலகத்தின் அத்தனை கோடி தமிழர் நெஞ்சங்களிலும் குடியிருக்கமாட்டாரா?

காலம் தாழ்த்தாது இப்பணியை இந்தியா செய்யுமானால் இந்தியாவிற்கும் இந்து சமுத்திரப் பிராந்தியத்திற்கும் ஒரு பாதுகாப்பு ஸ்திரமுள்ள நிலை உருவாகி ஏனைய வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கும் முடிவு கட்டப்படும் அல்லவா? ஒரு சிறிய தீவாக இருக்கும் சிறிலங்கா அருகில் இருக்கும் வல்லரசுக்கு அச்சுறுத்தலாக ஏனைய நாடுகளில் பல மில்லியன் ரூபாய்களைக் கொட்டி ஆயுதக் கொள்வனவு செய்வது நியாயம்தானா? என்பதனை இந்தியா ஏன் ஆழமாகச் சிந்தையில் எடுக்கக்கூடாது?

உலகில் தமிழன் வாழாத நாடு இல்லை. ஆயினும் தமிழனுக்கு என்றொரு நாடு இல்லை. தமிழன் தனக்கென்று ஓர் அரசை நிறுவுவதற்கும் தன்னைத் தானே ஆள்வதற்குத் தகுதியற்றவனா? ★

**ஆதிகோயிலடி ஜெயம்**

# காலபோக நெற்செய்கைக்கு மானிய உர விநியோகம் சென்ற ஆண்டில் நடந்த கதையாகவே தொடருமா?

## தென்மராட்சி தெற்கு விவசாயிகள் கேட்கிறார்கள்!

தென்மராட்சிப் பகுதியில் தனங்களப்பு, மறவன்புலோ பகுதியில் ஐந்தாயிரம் ஏக்கர் நெல் வயல்கள் உயர்பாதுகாப்பு வலயத்துள் உள்ளதால் அவை கடந்த ஆறு வருடங்களாகச் செய்கை பண்ணப்படவில்லை. ஏனைய பகுதிகளில் மேட்டுநிலப்பயிர்,நெல் விளைச்சல் ஆகியவற்றுக்கு வழங்கப்படும் அரச உதவிகளும் ஏனைய நன்மைகளும் உரிய முறையில் அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

கடந்தகால போக நெற்செய்கையின் போது தென்மராட்சி தெற்குப்பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்ட யூறியா பசளை ஒருபரப்புக்கு ஒன்றரைக்( 1 1/2) கிலோ என்ற விகிதத்தில் வழங்கப்பட்டது. அதுபோதாமையால் பல விவசாயிகள் யூறியா உரத்தைக் கூடிய விலையில் பெறவேண்டி ஏற்பட்டது. அதே நேரம் மோசடிகள் மூலம் மானிய உரம் பெற்ற சிலர் அவற்றைக் கூடிய விலைக்கு விற்றுப் பணம் ஈட்டினர்.

இவ்வாறான செயற்பாடுகள் சில கமநல நிலையங்களில் அங்குள்ள சில ஊழியர்களின் ஒத்தாசையுடன் இடம்பெற்றதாகப் பலரும் அரச உயர்அதிகாரிகளுக்குச் சுட்டிக் காட்டினர்.ஆனால், யாழ்.சூழல் நிலைவரம் காரணமாகத் தாழ்வுப்போக்கை அதிகாரிகள் கைக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால்,இச்செயற்பாட்டால் உண்மையாக உழைக்கும் விவசாயிகள் பெரும் நஷ்டத்தையும் கஷ்டத்தையும் எதிர்நோக்கநேர்ந்துள்ளது.

வரும் காலபோக நெற்செய்கைக்கென வழங்கப்படவுள்ள மானியஉரம்பெறப்பல சட்ட திட்டங்களைக் கமநலசேவை நிலையஊழியர்கள்,பெரும்பாக உத்தியோகத்தர் ஆகியோர் கூறிவருகின்றனர். அவர்கள் சொல்வதுபோல செயற்பட்டாலும் பாரபட்சம் சலுகை காட்டாமல் லாபம் கருதாமல் செயற்படுவார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

கமநலசேவை நிலையங்களில் கூடிய விலைக்கு யூறியா,பி-1,பொட்டாஸ் போன்ற பசளைகள் தற்போது விற்கப்படுகின்றன. கொழும்பில் 50 கிலோ யூறியா 'பை' ஒன்று ரூபா இரண்டாயிரம் விற்பதாகவும், கப்பல் செலவு ஒன்றுக்கு எழுநூறு ரூபா எனவும் கூறி வேறு செலவுகளும் சேர்த்து ஒரு பை மூவாயிரத்து நானூற்றி ஐம்பது (3450/-) ரூபாவுக்கு விற்கப்படுகின்றது.இது ஆகக் கூடிய கொள்ளைவிலை என விவசாயிகள் ஏங்குகின்றனர்.

தற்போது மேட்டுநிலப் பயிர்செய்யும் விவசாயிகள் செய்வதறியாது இக்கூடிய

**மக்கள் மன்றம்**

விலைக்கே யூறியாவை வாங்கிப் பயன்படுத்துகின்றனர். தற்போது மரக்கறி விலைகளும் வெங்காயமும் அதிகவிலை வீழ்ச்சியால் தாம் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்குவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரச அதிபரும், கமநல சேவைத் திணைக்கள ஆணையாளரும் இது விடயத்தில் கவனம் எடுத்தால் விவசாயிகளின் கவலையைப் போக்கலாம். மேலும் மானிய விலையில் வழங்கப்படவுள்ள யூறியாப் பசளையை நெற்செய்கையாளர்களுக்கு போதிய அளவு வழங்கப்பட ஆவனசெய்யவேண்டும். கடந்த முறை கைதடி கமநலசேவை நிலையத்தால் மானிய விலைக்கு வழங்கப்பட்ட யூறியாப் பசளை ஐம்பது பைக்கற்றுக்கள்வரை மேட்டுநில விவசாயிகளுக்குத் தவறாக வழங்கப்பட்டதாக நெற்செய்கையாளர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கைதடி கமநல நிலையத்தைச் சேர்ந்த பதினேழு சம்மேளன விவசாயிகளுக்கும் சம உதவிகள் கிடைக்க வழிசெய்யப்படவேண்டும். தற்போது கைதடி வட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இதனை மாற்றிஅமைக்கக் கைதடி கமநல நிலைய நிர்வாகத்திலும் மாற்ற[illegible] செய்தல் அவசியம். அத்துடன் பெரும்பா[illegible] உத்தியோகத்தரும் அப்பகுதிக்கு புதிதாய மாற்றலாகி வந்தவர் என்ற காரணத்தால் அங்குள்ளவர்களின் வழிகாட்டல், ஆலோசனைகளில் செயற்படுவதை விடுத்து,விவசாயிகளின் நிலைமைகளை விளங்கிச் சேவை மனப்பான்மையுடன் செயற்பட முன்வரவேண்டுமென விவசாயிகள் எதிர்பார்க்கின்றார்கள். ஏனைய மாவட்ட விவசாயிகள் பெறும் அரச உதவிகள், ஏனைய நலன்கள் யாவற்றையும் இங்குள்ள விவசாயிகளும் பெற்று வாழ்வில் முன்னேற யாழ். மாவட்டச் செயலாளர், கமநல சேவை ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அரசஅதிகாரிகள் செயலாற்றி உதவவேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன். ★

**கமக்காரன்**

## சு.வேக்கு நினைவுத் தூபி

நாவே உளியாய் நாடே கருங்கல்லாய்
சு.வே. நினைவுக்குத் தூணடுவேன் - பாவே
அழுத்திப் பதிக்கின்றேன் கல்வெட்டு அவனை
எழுத்தாளன் கதை மன்னன் என்று.

இங்கு கிடப்பவன் பேனா எழுதுவது
அங்கும் தொடரும் அணையாது - பொங்கிய
பாற்காவடி கேட்கும்; வெள்ளரியும் பச்சையாம்
நாற்கா மலருமொரு நூறு

இதோ இதன்கீழ் உறங்குவோன் இளைஞன்
இதோ, என்பு இன்றாகிழாய் வீசும் - அதோ பாரும்
கீழே இவன் படுக்கை கெஞ்சும் கலைப்பூக்கள்
தாவே தமிழின் தடம்

இது என் தூபிக் கல்வெட்டு
இன்றன் நாவின் சொல்வெட்டு
ஈராயிரத் தேழ்நாள் நட்டு.

- பண்டிதர் க.சச்சிதானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

உங்கள் பிள்ளை 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுகிறாரா?




அப்படியானால், ஒவ்வொரு பாடசாலையிலும் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாக தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பணப்பரிசில்கள் உங்கள் குழந்தைக்கும்.

முதலாம் இடம் ரூபா 10,000/-
இரண்டாம் இடம் ரூபா 7,500/-
மூன்றாம் இடம் ரூபா 5,000/-

அத்தோடு உங்கள் குழந்தை மாவட்டத்தில் முதல் இடத்தில் சித்தியெய்தால் அவனது / அவளது அருணலு கணக்கு மீதி இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும். (அதிகூடிய தொகை ரூபா. 50,000/- க்கு உட்பட்டதாகும்).

- இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது, 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் திகதியன்று, உங்கள் குழந்தையின் பெயரில் உள்ள அருணலு சிறுவர் கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- கணக்கு மீதியை பேணுவது மட்டுமே.
- இதுவரையில் உங்கள் பிள்ளையின் பெயரில் அருணலு கணக்கு ஒன்று ஆரம்பித்து இருக்காவிடில் தாமதிக்காமல் அருகே உள்ள கொமர்ஷல் வங்கிக்கு விரையுங்கள்.
- அர்ப்பணிப்புடன் கற்று அதிகம் வெல்லுங்கள் அருணலு பாதையில் உங்கள் குழந்தையையும் வழிநடத்துங்கள்.

அருண
சிறுவர் சேமிப்புக் கணக்கு

* உரிய விண்ணப்பப் படிவத்தை எமது இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**மீண்டும் பேச்சுக்களை......**

*(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ஒரு கோட்பாட்டை பரீட்சித்துப் பார்ப்பதற்காக இதனைக் கூறுவது, எவருக்கும், குறைந்த பட்சம் வடக்கில் அல்லலுறும் மக்களுக்கு எந்தவித நன்மையையும் ஏற்படுத்தப் போவதில்லை.

தாக்குதல்கள் தொடர்ந்தால், அவற்றை தடுத்து நிறுத்துவதற்காக நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர படையினருக்கு வேறு வழியில்லை.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் உலகிற்கு எடுத்துக் காட்டியிருப்பது போன்று, பொது மக்கள் மற்றும் படைத் தரப்பினர் இடையே ஏற்படும் சேதத்தைக் கருத்திற் கொண்டு, தொடர்ச்சியான கெரில்லாத் தாக்குதல்களை அனுமதிக்கமுடியாது. உலகில் வேறெங்கும் நடைபெறாதவாறு பலவந்தமாக அணிதிரட்டப்படுவர்களைக் கொண்டு அந்நடவடிக் கைகள் மேற்கொள் ளப்படும் போது, குறிப்பாக அவற்றை அனு மதிக்கவேமுடியாது.

**சர்வதேசத்தின் மௌனம் மனக்குழப்பத்தை தருகிறது**

இவ்வுண்மைக்கு மத்தியில் சர்வதேச சமூகம் பகி ரங்கமாக மௌனம் சாதிப்பது மனக்குழப்பத்தை ஏற் படுத்துவதாக அமைந்துள்ளது. இந்த மௌனம் காரணமாக சர்வ தேச அமைப்புகளில் தொழில் புரியாத அப் பாவி வன்னி மக்கள், தம் பிள்ளைகள் பறிக்கப்படுவதைக் கண்டு கலங்க வேண்டியுள்ளது.

இத் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கும், முடியுமானால் பாதிக்கப்பட்ட அப்பாவிகளைத் தம்குடும்பத்துடன் சேர்த்து வைப்பதற்கும் முனைப்பான சர்வ தேச முன்னெடுப்பு தேவைப்படுகிறது. இதனைச் செய்ய அஞ்சா நெஞ்சம் தேவைப்படுகிறது என்பதை நாம் அறிவோம். அத்தோடு, சாக்குப் போக்குகளை முன்வைப்பது சுலபமாகும்.

ஆயினும், அவ்வாறு மௌனம் சாதிப் பது தமது ஊழியர்களே பலியாகுவதற்கு வழிகோலும் என்பதை இப்போது சர்வதேச சமூகம் அனுபவரீதியாக அறிந்து கொண்டுள்ளது. எனவே, இப்பழக்கத்தை அடியோடு தைரியத்துடன் கண்டிக்குமாறு நாம் அத்தகைய அமைப்புகளையும் குறிப்பாக ஐக்கிய நாடுகள் குடும்பத்தையும் வேண்டிக் கொள் ளுகிறோம்.

பேச்சுகள் மூலம் தம் நோக்கங்களைப் பெற்றுக் கொள்ளமுடியாது என நம்புவோரின் மனதை மாற்ற முயற்சி எடுக்குமாறு விடுதலைப்புலிகள் அமைப்பினுள் சமாதானம் பற்றி உண்மையாகவே அக்கறையுள் ளவர்களையும் நாம் கேட்டுக் கொள்ளுகி றோம்.

இதற்கும் தைரியம் தேவைப்படும் என்ற போதிலும் மு[illegible] தீர்வை தேடிக் [illegible] திநிதித்துவப்படுத்தும் மக்கள் சார்பில் அவர்கள் அத்தகைய தைரியத்தைக் கொண்டிருப்பது அவசியமாகும்.

**முகமாலையில் சீண்டப்படாது தாக்குதல்**

மூதூரைத் தாக்கியதை அடுத்து, முகமாலை பாதுகாப்பு அரண்கள் மீது சீண்டப்படாத தாக்குதல் ஒன்றை விடுதலைப்புலிகள் நடத்தினர்.

ஆரம்பத்தில் அது முறியடிக்கப்பட்ட போதிலும், தொடர்ச்சியான ஊடுருவல் முயற்சிகளும் தாக்குதல்கள் பற்றிய அச்சுறுத்தல்களும், பாதுகாப்பு நடவடிக்கை களைத் தேவைப்படுத்தின. ஆயினும், மீண்டும் பேச்சுகளை ஆரம்பிப்பது அல்ல லுறும் எமது சக பிரஜைகள் மீதான அழுத்தத்தைக் குறைக்கும் .

மீண்டும் பேச்சுகளை ஆரம்பிக்குமாறு நாம் விடுதலைப்புலிகளை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

அத்தோடு, இச்சோகம் நிறைந்த ஆண்டு நிறைவின்போது, கடந்த ஓகஸ்ட் முதல் நடந் தேறிய சம்பவங்களினால் பாதிக்கப் பட்ட அனைவரையும் கருத்திற் கொண்டு, அநியாயமாக உயிரிழந்த எமது சகல பிரஜைகளையும் நினைவுகூருகிறோம்.

பொறுப்பாகப் பேச்சுகளில் ஈடுபடுமாறு விடு தலைப்புலிகளை நம்ப வைக்க தளர்வின்றி தைரியத்துடன் முயற்சி எடுக்குமாறு நாம் சர்வ தேச [illegible] கேட்டுக் கொள்கிறோம். ★

## மரண அறிவித்தல்



**திருமதி சின்னத்தங்கம் முத்துத்தம்பி**

பன்னாலை, நாவலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கம் முத்துத்தம்பி நேற்று (04.08.2007) சனிக்கிழமை காலமாகி விட் டார்.

அன்னார் கனகசுந்தரம் (உடையார்- ஜே.பி.) அவர்களின் அன்புத் தாயும் இராசேஸ்வரியின் அன்பு மாமியும் ஆவார்.

இன்று (05.08.2007) ஞாயிற்றுக்கிழமை 2 மணியளவில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*

(63359) கனகசுந்தரம் (மகன்- உடையார்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சர்வதேச மட்டத்திலும் ஈழத்தமிழர்களின் இராஜதந்திரக் காய்நகர்த்தல் அவசியம்

புலம்பெயர்ந்த நாடுகளில் வசிக்கும் ஈழத்தமிழ் உறவுகளிடம் ஒரு முக்கிய பொறுப்பை நினைவுபடுத்தியிருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன்.

''ஈழத்தமிழர் தாயகத்தில் சிங்களத் தரப்பால் ஏற்படுத்தப்படும் அவலங்களை - அல்லல்களை - சர்வதேச மயப்படுத்துங்கள். அந்தந்த நாடுகளில் இராஜதந்திர மட்டத்திலான கவனத்துக்கு அவற்றைக் கொண்டு வாருங்கள்!'' இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு உணர்வும் உயிரும் ஊட்டும் உன்னதப் பணியை உயர்வுடன் ஆற்றி வருகின்றவர்கள் நமது புலம் பெயர்ந்த உறவுகள்தாம். தாங்கள் கடும் உழைப்பால் பெறும் ஊதியத்தின் ஒரு பகுதியை விடுதலைப் போராட்டத்தின்பால் திருப்பி விடுவதன் மூலம் அந்தப் போராட்டத்துக்கு வெறுமனே நிதிப் பங்களிப்புச் செய்பவர்களாக மட்டுமன்றி, அதற்கு உயிர்ப்புக் கொடுப்பவர்களாகவும் அவர்கள் விளங்குகின்றனர்.

உலகின் எந்த நாட்டினதும் நேரடி உதவியின்றி, ஈழத் தமிழர் தாயகத்தில் ஒரு விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. உலகின் வேறு எந்தச் சக்தியிடமும் மண்டியிடாமல், ஈழத்தமிழர்கள் தங்களின் விடுதலைப் போராட்டத்தை சுயாதீனமாக - சுதந்திரமாக - பக்கம் சாராமல் - தாங்களே தனித்து நின்று - முன்னெடுக்கின்றார்கள் என்றால் அதற்கு இரண்டு முக்கிய காரணங்கள்.

ஒன்று - தனது சொந்தக் காலில் நின்று போராடி தமிழர்களின் இறுதி அபிலாசையை - இலட்சியத்தை - வென்றெடுக்க வேண்டும் என்பதில் தளராத மன உறுதியும் திடசங்கற்பமும் கொண்ட தலைமையின் வழிநடத்தலில் இப் போராட்டம் முன்னெடுக்கப்படுவது.

அடுத்து - சர்வதேச நாடு எதிலும் தங்கியிருக்கத் தேவையில்லை என்ற வகையில் அந்த இடத்தை முழுஅளவில் நிரப்பத் தயாரான தமிழ் உறவுகள், புலம்பெயர்ந்த நாடுகள் எங்கும் பரந்து வாழ்ந்தபடி இப்போராட்டத்துடன் தங்களைப் பிணைத்திருப்பது.

விடுதலைப் போராட்டத்துக்கு பின்னணி வலுவூட்டல் சக்தியாக - உயிர்நாடியாக - விளங்கும் புலம்பெயர்ந்த உறவுகளுக்கு அவற்றின் பொறுப்பையும் கடமையையும் மீண்டும் ஒரு தடவை நினைவூட்டியிருக்கின்றார் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன்.

வெறும் நிதிப்பங்களிப்புத் தருவதோடு அவர்களின் கடமை முடிந்து விடவில்லை. அதற்கு அப்பாலும் முக்கிய பொறுப்பு இருப்பதை ஞாபகப்படுத்தி உணர்வூட்டியிருக்கின்றார் அவர்.

ஈழத்தில் துவந்த யுத்தம் என்னவோ விடுதலை வேண்டும் ஈழத்தமிழர்களுக்கும் அரச ஒடுக்கு முறையில் வெறியாக இருக்கும் சிங்கள அரசுக்கும்தான். ஆனால் இதில் சர்வதேச ஈடுபாடும் பங்களிப்பும் தவிர்க்க முடியாத விவகாரங்களாக இழுத்து விடப்பட்டிருக்கின்றன.

ஓர் அரசு என்ற முறையில் கொழும்பு தனது வசதி, வாய்ப்புகள், இராஜதந்திர சிறப்புரிமைகள், தேசக் கட்டமைப்பு ஒன்றுக்கு சர்வதேச மட்டத்தில் கிடைக்கக் கூடிய விசேட அந்தஸ்து. அதிகாரங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேசத்தின் முன்னிலையில் முன்னிலையில் வெறும் குறுகிய இனவாதமாகவும், பயங்கரவாதமாகவும் பிரசாரப்படுத்தி, சித்திரித்து வருகின்றது. தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் உட்கிடையாகப் பொதிந்து கிடக்கும் தார்மீக நியாயங்களையும் அவர்களது போராட்ட வடிவத்தின் தவிர்க்க முடியாத கட்டாயத்தையும் சர்வதேசம் சரிவர அறியாத பின்னணியில், சிங்கள அரசின் பித்தலாட்டப் பிரசாரமே உலக அரங்கில் அம்பலத்தில் ஏற்கப்பட்டு வரும் துன்பியல் போக்கை நாம் காண்கின்றோம்.

தமிழ் மக்களின் தனித்துவத்தையும் இனத்துவ அடையாளத்தையும் - ஏன் இருப்பியலையும் கூட - நிர்மூலமாக்கி அழித்து, ஒழிக்கும் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் கொடுங்கோன்மைக்கு எதிராக - திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் அரச ஒடுக்கு முறைக்கு எதிராக - நியாயமும், கௌரவத்துடன் கூடிய வாழ்வும், வாழ்வியல் உரிமைகளும் வேண்டி, வேறு மார்க்கம் இல்லாததால், போராட வேண்டிய கட்டத்துக்கு - கட்டாயத்துக்கு - ஈழத்தமிழர்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள் என்ற மெய்மை நிலை சர்வதேசத்துக்கு இன்னும் சரிவர உணர்த்தப்படவேயில்லை.

தென்னிலங்கைச் சிங்களத்தின் அரச கட்டமைப்பு இராஜதந்திர ரீதியில் மேற்கொண்டு வரும் திட்டமிடப்பட்ட - அபத்த - பிரசாரங்கள், சர்வதேச ரீதியில் ஈழத்தமிழர்களின் உண்மை நிலையை மூடி மறைத்து மறக்கப் பண்ண வைத்துள்ளன.

கொழும்பில் இந்தப் பொய்ப்பிரசாரத்தை முறியடித்து உலகத்துக்கு இலங்கைத் தீவின் உண்மை நிலையை - ஈழத் தமிழர்களின் போராட்ட நியாயப்பாடுகளை - எடுத்துரைத்துத் தெளிவுபடுத்தும் முக்கிய பொறுப்பு வெளிநாடுகளில் வசிக்கும் புலம்பெயர்ந்த நமது உறவுகளையே பெருமளவில் சேருகின்றது. அதையே உரிமையோடு நினைவுபடுத்தி, அதை மேற்கொள்ளும்படி புலம்பெயர்ந்த உறவுகளைக் கோரியிருக்கின்றார் புலித்தேவன்.

அந்தந்த நாடுகளில் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன. அவற்றில், நமது புலம்பெயர்ந்த உறவுகளும் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றியும் வருகின்றனர். எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேச மயப்படுத்தவும் நமது தரப்பு நியாயங்களை சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்தவும் இத்தகைய எழுச்சி நிகழ்ச்சிகள் உதவும் என்பது வாஸ்தவம்தான்.

இதற்கு அப்பாலும் ஒரு முக்கிய பணி உண்டு. எமது விடுதலைப் போராட்ட நியாயப்பாடுகளை சர்வதேச நாடுகள் ரீதியாக அவற்றின் இராஜதந்திர வட்டாரங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே அதுவாகும். புலம்பெயர்ந்த நாடுகளில் நடத்தப்படும் பகிரங்க பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள் போன்றவற்றுக்கு மேலதிகமாக மூடிய அலுவலக அறைக்குள் மேற்கொள்ள வேண்டிய இராஜதந்திர நகர்வுகளும், சந்திப்புக்களும், கலந்துரையாடல்களுமே அவை.

அதனையே தவறாது முன்னெடுக்க நமது புலம்பெயர்ந்த உறவுகளை நினைவூட்டித் தூண்டியிருக்கின்றார் புலித்தேவன்.

# வத்தளைப் பகுதியிலுள்ள தமிழர் வீடுகளில் இனந்தெரியாத நபர்கள் புகுந்து சோதனை!

## எச்சரிக்கிறது மேலக மக்கள் முன்னணி

கொழும்பு,ஓக. 5

அண்மைக்காலமாக வத்தளை பிரதேசத்திலுள்ள தமிழர் வீடுகளுக்குச் சென்று இனந்தெரியாத நபர்கள் தகவல்களைத் திரட்டும் அராஜக செயல்களில் ஈடுபட்டுள்ளார் என்ற தகவல்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக செல்வந்தர் வீடுகளில் நுழையும் இவர்கள், தாம் புலனாய்வுத் துறைப் பொலிஸார் என்று கூறி அடையாள அட்டைகளைப் பார்க்கும் வகையில் அலுமாரிகளைத் திறந்து உடைகளைக் கலைத்து சோதனையிடுவதுடன் பணம், நகை வங்கி நிலுவைகள் எவ்வளவு இருக்கின்றன என்று கேள்விகளை எழுப்புகின்றனராம். இவர்கள் யார்? உண்மையான புலனாய்வுத் துறையினரா அல்லது கொள்ளையர்களா?''

- இவ்வாறு மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இத்தகைய மோசடிப் பேர்வழிகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸாருக்கு கூறப்பட்டுள்ளது. வத்தளைப் பகுதியில் குறிப்பாகத் தமிழர்கள் வசிக்கும் வீதிகளிலும், ஒழுங்கைகளிலும் இரவு பகல் வேளைகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும்படி பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

அதேவேளை, மக்கள் நிதானமாக இருக்க வேண்டும். இவ்வாறான இனந்தெரியாத நபர்கள் இரவு வேளைகளில் வருவார்களேயானால் கதவுகளைத் திறக்க வேண்டாம். அத்தருணமே அவசர பொலிஸ் இலக்கமான 119 உடன் தொடர்பு கொள்ளவும். மற்ற நேரங்களிலும் கூட அடையாளத்தை உறுதிப்படுத்தாத எந்த ஒரு நபரையும் வீட்டுக்குள் அனுமதிக்க வேண்டாம். இத்தகைய சம்பவங்கள் நடைபெறும் பகுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை எனது அலுவலகத்திற்கு அறிவிக் கவும் - எனவும் தெரிவித்துள்ளார்.

## மாவையில் நாளை திருக்கார்த்திகைத் திருவிழா

வலி.தென்மேற்கு, ஓக. 5

மாவைக் கந்தன் ஆலய காம்யோற்சவத்தில் திருக்கார்த்திகை விழாவும் ஷண்முகார்ச்சனையும் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளன.

இந்த விழாவில் பக்தர்கள் மாவிளக்கேற்றி தமது நேர்த்திகளை நிறைவேற்றுவர்.

காலை 10 மணிக்கு எம்.பி.பாலகிருஷ்ணன் கோஷ்டியினரின் நாதஸ்வராஞ்சலி, மு.ப. 11 மணிக்கு கலாவித்தகர் செல்வி குமுதா சோமசுந்தரக்குருக்களும் அவரது குருகுல மாணவிகளும் வழங்கும் பஜனாமிர்தம் ஆகிய விசேட நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

நண்பகல் 12 மணிக்கு திருப்புகழ் அஞ்சலியோடு ஷண்முகார்ச்சனை, பிற்பகல் 2 மணிக்கு முருகன் புதிய ஓங்கார மயில் வாகனத்தில் கற்பூர தீப பவனியுடன் வீதிஉலா ஆகியன இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அன்னதானமும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பக்தர்கள் தெல்லிப்பழையிலிருந்து ஆலயத்துக்குச் செல்ல விசேட பஸ் சேவைகள் நடைபெறுகின்றன.

(அ-1-135)

## இன்றைய நிகழ்வுகள்

வடமராட்சி,ஓக. 5

தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலய கல்விக் கண்காட்சி இன்று காலை 9 மணிக்கு அதிபர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) எஸ்.உதயகுமார் பிரதம விருந்தினராகவும் பருத்தித்துறைக் கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

* * *

'ஜீவநதி' கலை இலக்கிய சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று காலை 9 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மதிப்பீட்டுரையை கவிஞர் சோ.பத்மநாதனும் ஏற்புரையை சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் கலாமணி பரணீதரன் சின்னராஜாவும் நிகழ்த்துவர். (1-70)

* * *

சுன்னாகம் ''சால்ட் சொசையிற்றி'' அனுசரணையுடன் 'தாயகம்' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு நிறுவன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மயிலணி சைவமகா வித்தியாலயத்தின் உப அதிபர் திருமதி கனகாம்பிகை பரமசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் அறிமுகவுரையை தாயகம் ஆசிரியர் க.தணிகாசலம் நிகழ்த்துவார். (1)

* * *

ஊர்காவற்றுறையில் பிரசித்திபெற்ற தேவாலயங்களில் ஒன்றான சின்னமடு தேவாலயத்தின் திருப்பலித் திருவிழா இன்று காலை 7 மணிக்கும் மு.ப. 10 மணிக்கும் நடைபெறும்.

திருநாள் திருப்பலி யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும். (1-111)

* * *

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தில் சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளியின் மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் டாக்டர் வி.வேதநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சட்டத்தரணி எஸ்.என்.விஸ்வலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (1)

* * *

ரி.ரி.மயூரனின் 'மலர்களுக்காய் மனம் நிறைவாய்' என்ற தலைப்பிலான இறுவட்டு வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எஸ்.சந்திரசேகரசர்மா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். (1-120)

* * *

சுன்னாகம், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று காலை 9 மணிக்கு வித்தியாசாலையின் திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளன. (1)

* * *

அராலி வள்ளியம்மை வித்தியாசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கே.ஹரிகரசக்தி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் கலந்துகொள்வார். (1)

# தமிழ் மக்களின் இன்னல்கள் நீங்கிட சின்னமடு அன்னையிடம் வேண்டுவோம்

ஆவணி மாதம் என்றவுடன் பலர் மனங்களில் மடு ஞாபகம்தான் தோன்றும். ஆவணி மாதம் 15ஆம் திகதி மருதமடு அன்னையின் பாதத்தில் சிங்களவர், தமிழர் என்ற பேதமின்றி கத்தோலிக்கர் என்ற இணைப்புடன் நின்று வேண்டிக்கொண்ட நினைவுகள் என்றும் பசுமையானவை.

மன்னார் மறைமாவட்ட பெரிய மடு திருவிழாவை மட்டுமல்ல, ஆவணி மாதம் 5ஆம் திகதி தீவுப்பகுதி சரவணை சின்னமடு அன்னையின் யாத்திரைத் தலப் பெருவிழாவையும் யாத்திரீகர்கள் நினைவு கூறுகிறார்கள்.

இன்று சரவணை சின்னமடு யாத்திரைத்தலப் பெருவிழா காலை 10.00 மணிக்கு திருநாள் திருப்பலியுடன் வெகு சிறப்பாக கொண்டாடப்படவிருக்கிறது.

மன்னார் மறைமாவட்ட பெரியமடு அன்னையின் யாத்திரைத்தலத்திற்கும் யாழ்.மறைமாவட்டத்தைச் சேர்ந்த தீவுப் பகுதி சின்னமடு அன்னையின் யாத்திரைத்தலத்திற்கும் இடையிலானதொடர்பு என்ன? என்றொரு கேள்வி இங்கு எழுப்பப்படலாம்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் 25 வருட கத்தோலிக்க முன்னேற்றம் என்ற நூலின் சரித்திரப் பதிவினை வைத்துப் பார்க்கின்றபோது 1894 இல் சரவணைப் பகுதியில் பாடசாலையும் ஆலயமும் அமைக்கும் முயற்சி சந்திரசேகர அடிகள் காலத்தில் முதலில் ஆரம்பமானதாக அறியவருகிறது.

ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து மாதா சுரூபமும் ஒன்று இங்கு கொண்டுவரப்பட்டது. புதிய கொட்டில் ஆலயத்தில் 1895ஆம் ஆண்டு முதல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

### ஞாயிறு நற்பிரசாதம்

இதன் பின்னர் இந்த யாத்திரைத் தலம் பிரசித்திபெற்ற யாத்திரைத்தலமாக மாறத் தொடங்கியுள்ளது. முதலில் இப் பகுதியை அண்மித்த நாரந்தனை, சுருவில் கரம்பொன், ஊர்காவற்துறை, சாட்டி, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களிலிருந்து மக்கள் யாத்திரைக்கும் திருவிழாவிற்கும் வரத் தொடங்கினார்கள். பின்னர் சில்லாலை, பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை ஆகிய இடங்களிலிருந்தும் மக்கள் யாத்திரையாக இங்கு வந்து குவிந்துள்ளார்கள்.

இந்த யாத்திரைத்தலம் இவ்விரு பெரும் பகுதி மக்களை ஈர்க்கும் யாத்திரைத்தலமாக மட்டுமல்லாமல் மற்றைய இடங்களிலிருந்தும் அநேக பக்தர்களை வாரியணைக்கும் ஒரு புனித பகுதியாக மாறியது.

அக்கால மக்களின் வழக்கத்திற்குரிய வண்டில் கட்டி பெரு யாத்திரையாக செபமாலையையும் பிரார்த்தனையையும் பாடிக்கொண்டு தூர இட யாத்திரைத்தலங்களுக்கு செல்வதைப் போல மக்கள் பல இடங்களில் இருந்தும் இங்குவந்து குவியத் தொடங்கினார்கள்.

பெரிய மடுவிற்கு நீண்ட நாட்கள் எடுத்து வண்டிலில் செபமாலை பிரார்த்தனைகளை பாடிக்கொண்டும் செபித்துக் கொண்டும் செல்வது போல மக்கள் இங்கு வரத்தொடங்கியமையால் இந்த யாத்திரைத்தலத்தை சின்னமடு யாத்திரைத்தலம் என அழைக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

அன்று முதல் இன்றுவரை இந்த சின்னமடு யாத்திரைத்தலம் பெயர் பெற்ற ஒரு யாத்திரைத்தலமாக விளங்கி வருகிறது.

சின்னமடு அன்னையின் யாத்திரைத்தலம் தீவகமக்கள் மத்தியில் தேவ அன்னையின் அருள் வளங்களை அள்ளிப் பொழியும் ஒரு திருத்தலமாகவே இருந்து வந்தது.

### அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை

மன்னார் மறைமாவட்ட மருதமடு அன்னையின் திருச்சுரூபம் யாத்திரையாக தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் தென்னிலங்கை மக்களின் மனங்கள் மாறியதும் நீண்ட காலப் போர் சமாதானத்தை நோக்கி திரும்பியதும் நடைபெற ஏதுவாகியது. இதுமடு அன்னையின் அருள் வரமே யாகும். சின்னமடு அன்னையின் விழாவினை கொண்டாடுகின்ற போது எமது நாட்டின் சமாதான முயற்சி தடைகளைத் தாண்டி தமிழ் மண்ணில் நீதியோடு கூடிய ஓர் நிரந்தர தீர்வினை ஏற்படுத்த வேண்டுமென அருள்வரம் வேண்டுவோம்.

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 21 | திங்கட்கிழமை 06.08.2007 |
| திதி : அட்டமி | பி.பகல் : 03.39 |
| நட்சத்திரம் : | பரணி |
| | மாலை : 06.01 |
| நல்ல நேரம் | 12.04 - 01.34 |
| ராகுகாலம் | : 07.34 - 09.04 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடலியடைப்பில் பொல்லடிக்கு இலக்காகி ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 5

பண்டத்தரிப்பு, வடலியடைப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் பொல்லடிக்கு இலக்காகி ஒருவர் ஒயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த குமாரசாமி ராசலிங்கம் (வயது 43) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

பிரஸ்தாப நபரின் வீட்டின் மீது, இரவு நேரத்தில் கற்கள் வந்து வீழ்ந்தன. அருகில் உள்ள வீட்டில் இருந்தவர்களை 'நீங்கள் கல் எறிந்தீர்களா?' என அவர் கேட்டுள்ளார்.

அவ்வளவுதான் அடுத்த வீட்டில் இருந்தவர்கள் அவரது வீட்டுக்குள் புகுந்து பொல்லுகளால் இறந்தவரையும் அவரது மாமனையும் தாக்கினர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் திருமதி ச. இளங்கோவன் மரண விசாரணையை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இறந்தவரின் மாமனார் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கொலை புரிந்ததாகச் சந்தேகிக்கப்படுவோர் தலைமறைவாகி விட்டதாகச் சொல்லப்படுகிறது. (அ-1)

## அனைத்துக்கட்சி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு யோசனைக்கான இறுதி ஆவணத்தைத் தயாரித்து முடிப்பதற்கு சகல கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றும் திஸ்ஸ விதாரண கேட்டுள்ளார்.

இறுதி ஆவணத்தை அனேகமாக எதிர்வரும் 15ஆம் திகதி ஜனாதிபதியிடன் தாம் கையலிக்கவிருப்பதாகவும் அதன் பின் அனைத்துக் கட்சிக் குழுவின் ஒப் புதல் பெறப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார். அதனைத்துக்கட்சிகளின் தெரிவுக் குழுவுக்கு ஐ.தே.கட்சி, ஜே.வி.பி., தமிழத் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த சகல கட்சிகளும் யோசனைகளைச் சமர்ப்பித்திருந்தன. திஸ்ஸ விதாரண நிபுணர் குழு வுடன் சேர்ந்து தயாரித்து முன் வைத்த யோசனையை தாம் ஏற்றுக்கொள்வதாக ஐ.தே.கட்சி அறிவித்திருந்தது.

# கிழக்கு மாகாணத்துக்கான புதிய கொடியில் முஸ்லீம்கள் அடையாளப்படுத்தப்படவில்லை

## முஸ்லீம் காங்கிரஸ் ஆட்சேபம்

கொழும்பு, ஓக. 5

கிழக்கு மாகாண சபைக்கென வடிவமைக்கப்பட்ட புதிய கொடியில் முஸ்லிம் மக்களின் தனித்துவம் அடையாளப்படுத்தப்படவில்லை என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண சபைக்கென தனிக் கொடி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்கொடியில் கழுகு, சிங்கம், மீன் ஆகிய சின்னங்கள் இடம்பெற்றுள்ளன. கொடி மஞ்சல் நிற பின்னணியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கணிசமான அளவு முஸ்லிம் மக்கள் வாழ்ந்தபோதும், முஸ்லிம் மக்களை இணங்காட்டும் நட்சத்திரம் கொடியில் இடம்பெறவில்லை. முஸ்லிகளின் நிறம் பச்சை, இவை எதுவே இல்லாமல் இக்கொடி வடிவமைக்கப்பட்டுள்ளது என்று முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களின் தனித்துவத்துக்கு மதிப்பளிக்காத வகையில் கொடி வடிவமைக்கப்பட்டுள்ளமை முஸ்லிம் மக்களைப் புறக்களிக்கும் செயல் என்றும் அவர் கூறினார். (அ-1)

## பொருள்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டன.

அமைச்சின் யாழ். அலவலகத்தில் நடைபெற்ற பிரஸ்தாப மாநாட்டில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், படைத் தரப்பின் உயர் அதிகாரிகள், அமைச்சு அதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்த உயர்மட்ட மாநாடு குறித்து அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

### பட்டினியால் வாடும் நிலை

பொருள்களுக்கான விலைகள் அதிகரித்திருப்பதைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், வருமான வழிகள் அற்றவர்களுக்கும், குறைந்த வருமானங்களைக் கொண்டவர்களுக்கும் நிவாரணங்களை வழங்குவது தொடர்பிலும் இந்த மாநாடு நடத்தப்படுவதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா -

பெரும்பாலான மக்கள் பட்டினியால் வாடும் சூழ்நிலை இன்று உருவாகி இருக்கிறது. இந்த நிலையை நாம் உடனடியாக மாற்றியமைக்க வேண்டும். குடாநாட்டின் பிரச்சினைகள் ஒழுங்கான முறையில் தென் பகுதிக்குத் தெரிவிக்கப்படுவதில்லை - என்று சுட்டிக்காட்டினார்.

குடாநாட்டில் நிலவுகின்ற நிலைமைகள் தொடர்பில் ஒரு சாரார் மட்டுமே தென் பகுதிக்கு எடுத்துக் கூறிக்கொண்டிருப்பதால் எதுவிதப் பயனும் ஏற்படப் போவதில்லை. பொறுப்புமிக்க அனைத்துத் தரப்பினரும் குடாநாட்டின் நிலைமைகளை தென் பகுதிக்குத் தெரியப்படுத்துவதன் மூலமே இந்த நிலையை மாற்றியமைக்க முடியும் என்றும் மேலும் தெரிவித்த அவர் -

அமைச்சர் என்ற வகையிலும், அரச அதிகாரிகள் என்ற வகையிலும் பாதுகாப்பு அதிகாரிகள் என்ற வகையிலும் நாம் எல்லோருமே அரசாங்கத்தின் பிரதிநிதிகள் என்பதால் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எமக்குப் பெரும் பொறுப்பு இருப்பதை உணர்த்தினார்.

### விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா, உப்பு, மரக்கறி எண்ணெய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களை கூட்டுறவுச் சங்கங்களில் பங்கீட்டு அடிப்படையில் கட்டுப்பாட்டு விலைக்குப் போதுமான அளவு சில்லறை வியாபாரத்திற்கு வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நிவாரணங்களை வழங்கும் போது 17 வருடங்களுக்கு முன்பு இருந்த பொருள்களின் நிர்ணய விலைகளின் பெறுமதிக்கேற்பவே இன்று வரையில் நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் இந்த நிலையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. எனவே, இதன் பின்னர் நிவாரணங்களை வழங்கும் போது மக்களின் உணவுத் தேவைக்கேற்ப நிறைக்கு உணவுப் பொருள்களை வழங்குவது என்றும் இந்த நிவாரணப் பொருள்கள் உரிய முறையில் கொழும்பில் இருந்து குடாநாட்டிற்கு தொடர்ந்து கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி தீர்மானங்கள் அடங்கிய அறிக்கை உடனடியாக ஜனாதிபதியின் பார்வைக்கு அனுப்பப்பட்டு அதன் பின்னர் உரிய நடவடிக்கைகளை துரித கதியில் எடுக்க இருப்பதாக அமைச்சர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும் - என்றுள்ளது. (அ-1)

## அரசுக்கு மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் மக்கள் பயன் பெறுவதுடன் அரசுக்கு மக்களின் ஆதரவு அதிகரித்துள்ளது - என்றார்.

எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிராக நடத்திவரும் எதிர்ப்புப் போராட்டத்துக்குப் பதிலாக அரசு ஏற்பாடு செய்துள்ள கூட்டம் ஒன்றே நேற்று குருநாகலில் இடம் பெற்றது. (அ-1)

## அரசாங்கம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த சிந்தனையை மீறி ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 17 பேரை அரசாங்கம் இணைத்துக் கொண்டது. அதேபோல் சந்தர்ப்பவாதிகளான இ.தொ.க., முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றையும் அரசாங்கம் சேர்த்துக் கொண்டது.

மஹிந்த அரசாங்கம் வீழ்வது என்பது உறுதியானது. அந்த அரசாங்கத்தை நாங்கள் பாதுகாக்கமாட்டோம். மாறாக ஜே.வி.பியின் அரசாங்கத்தை அமைக்க முயற்சிப் போம் - என்றார் அவர். (அ-1)

## நாயகனைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மே மாதத்தில் இந்தப் "புதிய பறவையை" கண்ட இளைஞன் தங்கராஜா றேகன் அதனைப் பிடித்து கலைவாணி வீதியில் உள்ள தனது வீட்டிற்குப் பிடித்துச் சென்று தனது செல்லப் பிராணியாக வளர்த்தார்.

எனினும் பிராணிகள் வதையைத் தவிர்க்கும் நோக்குடன், பிரதேச செயலரின் ஆலோசனைப்படி, அந்தப் பகுதி கிராமசேவகர் முன்னிலையில் அந்தப் பறவை சுதந்திரமாக வாழ்வதற்காகப் பறக்கவிடப்பட்டது.

கட்டி வளர்க்கப்பட்டிருந்தாலும், வேறு சூழலில் வாழ்ந்திருந்தாலும் தனது வளர்ப்போரிடம் - "நாயகனி"டம் - மீண்டும் வந்து சேர்ந்திருக்கிறது, ஐந்து அடி நீள இறக்கைகள் கொண்ட அந்த அதிசயப் பறவை. கடந்த ஜூலை மாதம் 6ஆம் திகதி தனது செல்லப்பறவை தன்னைத் தேடி - தனது வீட்டுக்கு- வந்ததாக மகிழ்ச்சி பொங்கக் கூறுகிறார் இளைஞன் றேகன்.

அதிசயப் பறவையைத் தான் கட்டி வளர்ப்பதில்லை என்றும், இரவில் வீட்டில் உள்ள மரம் ஒன்றில் உறங்கச் சென்று காலையில் இறங்கி வீட்டிற்குள் வந்துவிடும் என்றும் கூறுகிறார் அவர். நாளாந்தம் சுமார் மூன்று கிலோ மீனை அதற்கு உணவாகக் கொடுப்பதாகவும் அவர் மேலும் சொன்னார். (அ-50)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் நேற்று வெருகல் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கறுக்காய் முனை என்ற இடத்தில் மீள் குடியமர்த்தப்பட்டன. அவர்கள் 22 பஸ்களில் மட்டக்களப்பில் இருந்து கூட்டிச் செல்லப்பட்டனர்.

திருமலை மாவட்டம் வெருகல் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்த 2,870 குடும்பங்களில் இதுவரை 1,900 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று பிரதேச செயலர் உமாமகேஸ்வரன் தெரிவித்தார். (அ-1-151)


**Study and Work in London**
**St. Patrick's International College**
**A 203 year old institution in the Heart of London where 1600 students From 40 countries come to study and work**

Higher National Diploma in Hospitality
One year study and one year paid internship

Higher National Diploma in Healthcare Management
One year study and one year paid internship

Higher National Diploma in Network Engineering and Telecommunication Systems
2 year study and part time work

Higher National Diploma in Wireless Applications and Mobile Solutions
2 year study and part time work

Higher National Diploma in Business
2 year study and part time work

ALL LEADING TO ONE YEAR BACHELOR AND ONE YEAR MASTER DEGREES
One year full time work after Bachelor or Master degree under new British rules

Interviews and applications at the Office of the Rector Sl Patrick's College, 14 St. Patrick's Road, Jaffna.
10:00 am Saturday, 11th August 2007

ICT - ICT - ICT
Grade 10
English Medium
Tamil Medium
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பொற்பதி வீதி
கொக்குவில் கிழக்கு
R.Kumaran - B.Sc.
0776577359

**வீடு விற்பனைக்கு**
கோப்பாய் தெற்கு, இராஜவீதியில் (அரசசார்பற்ற நிறுவன களஞ்சியத்திற்கு அருகாமையில்) 5 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு
தொடர்பு: [illegible]
(63189)

**வெற்றி வழி A/L தமிழ்**
2005 க.பொ.த. உயர்தர
2009 செப்டம்பர் [illegible]
* 2008 மீட்டல், Paper - 9 - 10 சனி
* 2009 புதிய பிரிவு - 10-11 ஞா.
கையேடுகளுடன் கூடியது
20 மணித்தியால விசேட வகுப்பு
இலவசம் (Day Class)
நிர்வாகி: வஸ். பூபாலசிங்கம்
BEACON யாழ்ப்பாணம்.

**இலவசக்கணனிப்பயிற்சி**
ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.
MCS Supported By UNDP/JRRP
விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 08-08-2007 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

**துரித தபால்கள், பொதிகள் சேவை**
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருள்கள் உணவுப் பொருள்கள் உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835
46 ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310

**மாணவருக்கான விடுமுறைக்கால விசேட பிரிவு**
GIT - ICT
MCS Supported By UNDP/JRRP
பதிவுகள் 08.08.2007 முன் நேரில்
மேலதிக விபரங்களுக்கு நேரில் 324, Palaly Road, Jaffna.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றும்
திருமதி ச. சுபாசினி
அவர்களின் அன்புக் கணவர்
தர்மலிங்கம் சண்முகராசா
அவர்களின் அகால மரணத்தினால் துயருறும் அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலை நலன்புரிச் சங்கம், யா/ வல். நாவலர் மகா வித்தியாலயம்.
(63369)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி
பூதத்தம்பி இராசம்மா

அன்னை மடியில் 18.05.1951
ஆண்டவன் மடியில் 06.07.2007

இறுதிக் கிரியையிலே பங்கு பற்றிக் கொண்ட அனைவருக்கும், ஆறுதல் கூறிய அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலியில் கவலை தெரிவித்த சாவகச்சேரி வைத்தியசாலை சமூகத்திற்கும் அன்புடனும் பண்புடனும் கூறுகின்றோம் நன்றியினை

இன்று (05.08.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற இருக்கின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வராணி (மகள்),
பாலாவி தெற்கு, கொடிகாமம். (63368) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சீவரத்தினம் இரத்தினகுமார் (காரைநகர்)

கருங்காலியைப் பிறப்பிடமாகவும் வலந்தலையை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் இரத்தினகுமார் நேற்று (04.08.2007) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரத்தினம் - பரிமளம் தம்பதியரின் அன்பு மகனும் நாகரத்தினம், விஜயரத்தினம், செல்வரத்தினம் காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நகுலேஸ்வரி, வதனா, அருந்தவராணி, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காரைநகர், சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வலந்தலை, காரைநகர். (63367) தகவல்: க.கணேசமூர்த்தி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.08.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org